ISSN: 2582–5518




புதுகை
# வரலாறு
நாளிதழ்

WWW.VARALARUU.COM VARALARUU PUDUGAIVARALARU VARALARUU 7502051351




திங்கள் ❖ பிப்ரவரி. 12, 2024 | சென்னை & புதுக்கோட்டை | 6 பக்கம் ❖ வரலாறு 9 ❖ இதழ் 125 ❖ ரூ.10

### பாஜக கூட்டணியில் அதிமுக இல்லை என்பது இறுதியானது; உறுதியானது

# திட்டவட்டம்

## திமுகவைப் பொறுத்தவரை, கூட்டணியை நம்பித்தான் இருக்கிறது. மக்களை நம்பி இல்லை. அதிமுக மக்களை நம்பிக் கொண்டிருக்கிறது; இபிஎஸ் பேச்சு

**கிருஷ்ணகிரி, பிப். 12–**

**"அதிமுக இன்னும் கூட்டணி அமைக்கவில்லை என்று கூறுகின்றனர். எந்த நேரத்தில் அமைக்க வேண்டுமோ சரியான நேரத்தில் அமைப்போம். திமுகவில் கூட்டணி பேச்சுவார்த்தை இழுபறியில் உள்ளது. 10 நாட்களாக நடைபெறும் கூட்டணி பேச்சுவார்த்தை இன்னும் முடிவுக்கு வரவில்லை" என்று அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.**



கிருஷ்ணகிரி மாவட்டம் பர்கூரில் மாற்றுக் கட்சியினர் அதிமுகவில் இணையும் நிகழ்ச்சி, அக்கட்சியின் பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி தலைமையில் நேற்று நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் கலந்துகொண்டு அவர் பேசுகையில், "இன்னும் பாஜகவுடன் அதிமுக மறைமுகமாக உறவு வைத்துக் கொண்டுள்ளதாக கூறி வருகின்றனர். நான் ஏற்கெனவே பலமுறை சொல்லிவிட்டேன். அதிமுகவின் முன்னணி தலைவர்களும் இதை தெளிவுபடுத்தி விட்டார்கள். அதிமுகவைப் பொறுத்தவரைக்கும், ஏற்கெனவே அறிவிக்கப்பட்டுவிட்டது. 25.09.2023 அன்று, அதிமுக தலைமை அலுவலகத்தில் மாவட்டச்செயலாளர்கள் கூட்டம், தலைமைக் கழக நிர்வாகிகள் கூட்டம் கூட்டப்பட்டது. அக்கூட்டத்தில், ஒருமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, நாங்கள் அறிவித்தோம்.

பாஜகவுடன் அதிமுக கூட்டணியில் இல்லை. தேசிய ஜனநாயக கூட்டணியிலும் அதிமுக இல்லை. 2023ம் ஆண்டு செப்டம்பர் மாதமே அதிமுகவால் அறிவிக்கப்பட்ட செய்தி இது. அதன்பிறகு, கிட்டத்தட்ட 5 மாத காலமாக, வேண்டுமென்றே திட்டமிட்டு ஊடகங்களிலும் பத்திரிகைகளிலும் எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்கள் ஒரு தவறான செய்தியை வெளியிட்டுக்கொண்டே இருக்கிறார்கள். எனவே, ஊடகங்கள் மற்றும் பத்திரிகைகளுக்கு இறுதியாகவும் உறுதியாகவும் சொல்கிறோம், அதிமுக பாஜக கூட்டணியில் இல்லை. இனி எந்த இடத்திலும் இந்த கேள்வியைக் கேட்காதீர்கள். ஊடகங்கள் மற்றும் பத்திரிகைகள் இனி எப்போதும் இந்த கேள்வியை எழுப்ப வேண்டாம் என அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதே நேரத்தில், அதிமுக இன்னும் கூட்டணி அமைக்கவில்லை என்று கூறுகின்றனர். எந்த நேரத்தில் அமைக்க வேண்டுமோ சரியான நேரத்தில் அமைப்போம். திமுக கூட்டணி பேச்சுவார்த்தையில் இழுபறி நிலவி வருகிறது. 10 நாட்களாக நடைபெறும் அக்கூட்டணியின் பேச்சுவார்த்தை இன்னும் முடிவுக்கு வரவில்லை. ஏற்கெனவே, அந்த கூட்டணியில் அங்கம் வகிக்கின்ற கட்சிகளுக்கு கடந்த தேர்தலில் ஒதுக்கிய இடங்களைக் கொடுக்க மறுக்கும் கட்சிதான் திமுக. அந்த கூட்டணியில் எத்தனைக் கட்சிகள் இருக்கும், இல்லாமல் போகும் என்பது இன்னுமொரு 10 நாட்களில் தெரிந்துவிடும். திமுகவைப் பொறுத்தவரை, கூட்டணியை நம்பித்தான் இருக்கிறது. மக்களை நம்பி இல்லை. அதிமுக மக்களை நம்பிக் கொண்டிருக்கிறது. மக்கள்தான் எஜமானர்கள். மக்களின் முடிவுதான் இறுதியானது. வாக்களிக்கும் மக்களைத்தான் எஜமானர்களாக நாங்கள் எண்ணுகிறோம்" என்று தெரிவித்தார்.

## நாளை டெல்லியை முற்றுகையிடப்போவதாக விவசாயிகள் அறிவிப்பு – பாதுகாப்பை பலப்படுத்த போலீஸார் தீவிரம்

புதுடெல்லி : பிப். 12–

நாடு முழுவதிலும் இருந்து 200 விவசாய சங்கங்களைஒருங்கிணைத்து நாளை டெல்லியை நோக்கி பேரணி நடத்த இருப்பதாக சம்யுக்தா கிஸான் மோர்ச்சா (அரசியல் சாராதது) மற்றும் கிஸான் மஸ்தூர் மோர்ச்சா அமைப்பினர் அறிவித்துள்ள நிலையில் அதனை எதிர்கொள்ள டெல்லி, ஹரியாணா போலீஸார் தயாராகி வருகின்றனர்.



கடந்த 2021-ம் ஆண்டு ஜன.26ம் தேதி நடந்த விவசாயிகள் போராட்டத்தின் போது டெல்லி தெருக்களில் போலீசாருக்கும், விவசாயிகளுக்கும் இடையில் நடந்த மோதல் மீண்டும் நடந்துவிடக்கூடாது என்பதற்காக விவசாயிகள் பேரணியை எதிர்கொள்ள டெல்லி போலீஸார் அனைத்து விதங்களிலும் தயாராகி வருகின்றனர். இது குறித்து டெல்லி போலீஸ் வட்டாரங்கள் கூறுகையில், "விவசாய அமைப்புகள் போராட்டம் அறிவித்துள்ள நிலையில் டெல்லி போலீஸார் உஷார் படுத்தப்பட்டுள்ளனர். குறைந்தபட்ச ஆதார விலை, ஓய்வூதிய பலன்கள் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி 200க்கும் அதிகமான விவசாய அமைப்புகள் நாளை போராட்டம் நடத்த இருப்பதாக அறிவித்துள்ளன. விவசாயிகளை ஹரியாணா எல்லையிலேயே தடுப்புகளைக் கொண்டு தடுத்து நிறுத்த டெல்லி போலீஸார் திட்டமிட்டு வருகின்றனர்.

விவசாயிகள் டெல்லிக்குள் நுழைய முயன்றால் இந்தத் தடுப்புகளை நகர்த்த கிரேன்களும் எல்லைப் பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. டெல்லிக்குள் விவசாயிகளை நுழைய விடாமல் தடுக்கும் வகையில் ஹரியாணாவும் சிமெண்ட் தடுப்புகளை எல்லையில் வைத்துள்ளது. இதனிடையே பஞ்சாப் மற்றும் ஹரியாணா போலீஸார் விவசாயிகளின் போராட்டங்களை எதிர்கொள்ளும் வகையில் போலி டிராக்டர் பேரணி ஒத்திகையில் ஈடுபட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. ஹரியாணாவில் 10, பஞ்சாபில் 30 என மொத்தம் 40 டிராக்டர்கள் பேரணியில் ஈடுபடுத்தப்பட்டதாக கூறப்படுகிறது.

விவசாயிகள் தடுப்புகளை மீறிச்செல்ல முயன்றால் கண்ணீர் புகை வீசுவதற்காக அதற்கான பயிற்சியில் டெல்லி போலீஸார் ஈடுபட்டுள்ளனர். இதுகுறித்து வெளியாகியிருக்கும் வீடியோவில், வடக்கு டெல்லியின் திறந்த வெளி ஒன்றில் போலீஸார் கண்ணீர் புகை குண்டுகளை வீசி பயிற்சியில் ஈடுபட்டனர். போலீஸாரின் இந்தப்பயிற்சி உள்ளூர் வாசிகளிடம் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. அவர்களில் பலர் பயிற்சிக்கு பின்னர் தங்களின் கண்களில் எரிச்சல் ஏற்பட்டதாக புகார் தெரிவித்தனர்.

விவசாயிகளின் போராட்டத்தில் சுமார் 2,000 டிராக்டர்கள், 20,000 விவசாயிகளுக்கும் அதிகமானவர்கள் பங்கேற்கலாம் என உளவுத்துறை தகவல்கள் தெரிவிக்கின்றன. பஞ்சாப், ஹரியாணா, ராஜஸ்தான், உத்தரப்பிரதேசம், கேரளா, கர்நாடகா ஆகிய பகுதிகளில் இருந்து விவசாயிகள் வரலாம். அவர்கள் டெல்லிக்குள் நுழைவதற்கு கார், இரண்டு சக்கர வாகனங்கள், மெட்ரோ ரயில் மற்றும் பேருந்துகளை பயன்படுத்தலாம் என்றும், அவர்களில் பலர் பிரதமர், அமைச்சர்கள், பாஜக தலைவர்களின் வீடுகளுக்கு முன் கூடி போராட்டம் நடத்தலாம் என்றும், போராட்டத்தில் பெண்களும், குழந்தைகளும் ஈடுபடுத்தப்படாலாம் என்றும் போலீஸார் தெரிவித்துள்ளனர்.

போராட்டத்தை முன்னிட்டு டெல்லி போலீஸார் சமூக வலைதளங்களை தீவிரமாக கண்காணித்துவருகின்றனர். விவசாயிகளின் போராட்டத்தில் சமூக விரோதிகள் புகுந்து சட்ட விரோத செயல்களில் ஈடுபடக்கூடாது என்று போலீஸார் அஞ்சுகின்றனர். கடந்த ஜன.26ம் தேதி டெல்லிக்குள் நுழைந்து விவசாயிகள் நடத்திய போராட்டத்தின் போராட்டக்காரர்களில் சிலர் வன்முறையில் ஈடுபட்டனர். அவர்களில் சிலர் செங்கோட்டையை அடைந்து அங்கு விவசாய சங்கங்களின் கொடிகளை ஏற்றினர். இந்த போராட்டத்தில் நூற்றுக்கணக்கானோர் காயமடைந்தனர். 30 போலீஸ் வாகனங்கள் சேதப்படுத்தப்பட்டன.

விவசாயிகளை டெல்லிக்குள் நுழைய விடாமல் எல்லையிலேயே தடுத்து நிறுத்த ஹரியாணா அரசும் தீவிரமாகி வருகிறது. பஞ்சகுலாவில் 144 தடையுத்தரவு அமல்படுத்துவது, இணைய சேவை, மொத்தமாக குறுஞ்செய்தி அனுப்ப தடைவிதிப்பது, எல்லைப்பகுதிகளில் சிமெண்ட் தடுப்புகள், தண்ணீர் பீச்சும் இயந்திரம், மணல் முட்டைகள் அடுக்குவது என தயாராகி வருகிறது. விவசாயிகளை தடுத்து நிறுத்த 50 துணைராணுவ படைப் பிரிவுகளும் வரவழைக்கப் பட்டுள்ளன.

## "இந்திய விழுமியங்களைக் கொண்ட கல்வி முறை தேவை" – பிரதமர் மோடி வலியுறுத்தல்

புதுடெல்லி, பிப். 12–

இந்திய விழுமியங்களைக் கொண்ட கல்வி, காலத்தின் கட்டாயத் தேவை என்று பிரதமர் மோடி வலியுறுத்தியுள்ளார்.



சுவாமி தயானந்த சரஸ்வதியின் 200-வது பிறந்த நாளையொட்டி குஜராத் மாநிலம் மோர்பியின் தங்காராவில் உள்ள சுவாமி தயானந்தர் பிறந்த இடத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்ச்சியில் பிரதமர் நரேந்திர மோடி காணொலி மூலம் நேற்று உரையாற்றினார். அப்போது பேசிய அவர், "அந்த காலத்தில் இருந்த வழக்கங்களும், சமூகத் தீமைகளும் எவ்வாறு நம்மை பாதித்தன என்பதை நமக்குத் தெரிவித்தவர் தயானந்த சரஸ்வதி. நம்மிடம் இருந்த சமூக தீமைகள், நம்மை தாழ்ந்தவர்களாக சித்தரிப்பதற்கான ஒரு வழிமுறையாக பிரிட்டிஷ் அரசாங்கம் பயன்படுத்தியது. சிலர் சமூக மாற்றங்களைக் குறிப்பிட்டு பிரிட்டிஷ் ஆட்சியை நியாயப்படுத்தினர். சுவாமி தயானந்தரின் வருகை இந்தச் சதிகளுக்கு பலத்த அடி கொடுத்தது. சுவாமி தயானந்த சரஸ்வதி பெண்களுக்கு சம உரிமை வேண்டும் என்று வாதிட்டார்.

லாலா லஜபதி ராய், ராம் பிரசாத் பிஸ்மில், சுவாமி சிரத்தானந்தா போன்ற புரட்சியாளர்கள் ஆரிய சமாஜத்தால் தாக்கம் பெற்று உருவானார்கள். தயானந்தர் ஒரு வேத ஞானி மட்டுமல்ல; ஒரு தேசிய முனிவரும் கூட. அமிர்தகாலத்தின் ஆரம்ப ஆண்டுகளில் சுவாமி தயானந்தரின் 200-வது ஆண்டு விழா வந்துள்ளது. இந்தியாவைப் பற்றி சுவாமிஜி வைத்திருந்த நம்பிக்கையை, நாம் அமிர்தகாலத்தின் மீதான தன்னம்பிக்கையாக மாற்ற வேண்டும். சுவாமி தயானந்தர் நவீனத்துவத்தின் ஆதரவாளராகவும், வழிகாட்டியாகவும் திகழ்ந்தார்.

இந்திய விழுமியங்களை அடிப்படையாகக் கொண்ட கல்வி முறை காலத்தின் தேவை. சுவாமிஜியின் தொலைநோக்குப் பார்வையை முன்னெடுத்துச் செல்லும் வகையில் தேசிய கல்விக் கொள்கை உள்ளது. ஆரிய சமாஜ் பள்ளிகள் இதற்கான மையங்களாக உள்ளன. தேசிய கல்விக் கொள்கையின் மூலம் நாடு இப்போது அதை விரிவுபடுத்துகிறது. இந்த முயற்சிகளுடன் சமூகத்தை இணைப்பது நமது பொறுப்பு". என்று பிரதமர் பேசினார். மேலும் சுவாமி தயானந்த சரஸ்வதி பிறந்த குஜராத்தில் தானும் பிறந்திருப்பதை பெருமையாக கருதுவதாகவும் பிரதமர் தெரிவித்தார்.

## அரசு பள்ளிகள், அங்கன்வாடிகளுக்கு 100% குடிநீர் இணைப்பு : தமிழக அரசுக்கு மத்திய அரசு பாராட்டு

சென்னை : பிப். 12–

தமிழகத்தில் ஊரகப் பகுதிகளில் அரசு பள்ளிகள் மற்றும் அங்கன்வாடிகளுக்கு 100 சதவீதம் குடிநீர் இணைப்பு வழங்கி இருப்பது இதர மாநிலங்களுக்கு முன்னுதாரணமாக இருப்பதாக மத்திய அரசு குடிநீர் வழங்கல் துறை செயலர் வினித் மகாஜன் பாராட்டியுள்ளார்.



இது தொடர்பாக அரசு வெளியிட்ட செய்திக் குறிப்பில் கூறியிருப்பதாவது: ஜல் ஜீவன் இயக்கம் மற்றும் தூய்மை பாரதம் திட்டம் (கிராமப்புறம்) ஆகியவற்றின் கீழ் ஒப்புதல் வழங்கப்பட்ட பல்வேறு திட்டங்களின் செயல்பாடுகள் குறித்தும், வரும் ஆண்டில் இத்திட்டங்களின் கீழ் மேற்கொள்ளப்படும் பணிகள் குறித்த ஆலோசனைக் கூட்டம் தலைமைச் செயலர் சிவ் தாஸ் மீனா, மத்திய அரசின் குடிநீர் வழங்கல் துறை செயலர் வினித் மகாஜன் ஆகியோர் தலைமையில் தலைமைச் செயலகத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை நடைபெற்றது.

மாநிலத்தின் ஊரகப் பகுதிகளில் உள்ள வீடுகளுக்கு வீடு தோறும் குடிநீர் இணைப்பு வழங்கும் ஜல் ஜீவன் திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்பட்ட மற்றும் செயலாக்கத்தில் உள்ள திட்டங்கள் குறித்தும், குடிநீர் ஆதாரங்களை மேம்படுத்த எடுக்கப்பட்டுவரும் நடவடிக்கைகள் குறித்தும், நடைபெற்று வரும் 45 புதிய கூட்டுக் குடிநீர் திட்டங்களின் முன்னேற்றம் குறித்தும், குடிநீர் ஆதாரங்களை மேம்படுத்துவதற்காக செயல்படுத்தப் படும் 56 திட்டங்கள் குறித்தும் விரிவாக கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது. ஊரகப் பகுதிகளில் 100 சதவீதம் குடிநீர் இணைப்பு வழங்கிய பிறகு கிராம சபைகளில் வைத்து உறுதி செய்வது குறித்தும், ஆலோசிக்கப் பட்டது.

ஊரகப் பகுதிகளில் தூய்மைபாரதம்திட்டத்தின் செயல்பாடுகள், திடக் கழிவு மற்றும் திரவக் கழிவு மேலாண்மை குறித்தும் பல்வேறு திட்டங்களை ஒருங்கிணைத்து தமிழ்நாட்டில் செயல்படுத்தப்படும் முன்னோடி முயற்சிகள் குறித்தும் இக்கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்டது. ஊரகப் பகுதிகளில் தனி நபர் வீடுகளில் 100 சதவீதம் கழிப்பறைகள் கட்டுவது மற்றும் பயன்படுத்துவதற்கு மாநில அரசால் மேற்கொள்ளப்படும் உத்திகள் குறித்தும், பிளாஸ்டிக் கழிவுகள் மேலாண்மை குறித்தும் விவாதிக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் ஜல் ஜீவன் இயக்க திட்டத்தில் தேசிய அளவில் 73.98 சதவீத வீடுகளுக்கு குடிநீர் வழங்கப்பட்டுள்ள நிலையில் தமிழ்நாட்டில் ஊரகப் பகுதிகளில் 1 கோடிக்கு மேல் அதாவது 80.43 சதவீத வீடுகளுக்கு குடிநீர் இணைப்பு வழங்கி தேசிய அளவில் மாநிலத்தின் சிறப்பான செயல்பாடு பாராட்டப்பட்டது. மேலும் மாநிலத்தின் அனைத்து அரசு பள்ளிகள் மற்றும் அங்கன் வாடிகளுக்கு 100 சதவீதம் குடிநீர் இணைப்பு வழங்கப் பட்டுள்ள சிறப்பான நடவடிக்கைகள் இதர மாநிலங்களுக்கு முன்னுதாரணமாக உள்ளது எனவும் பாராட்டப்பட்டது என்று செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

## கிளாம்பாக்கத்தில் இருந்து போதிய பேருந்துகள் இயங்கவில்லை என்பது வதந்தி

### அமைச்சர் சிவசங்கர் பேட்டி

சென்னை : பிப். 12–

சிலர் வேண்டுமென்றே திட்டமிட்டு பொய் வதந்திகளை பரப்பி வருகின்றனர் என்று அமைச்சர் சிவசங்கர் கூறியுள்ளார்.



கடந்த இரண்டு நாட்களாக கிளாம்பாக்கம் பேருந்து நிலையத்தில் இருந்து பல்வேறு பகுதிகளுக்கு பேருந்துகள் சரியாக இயக்கப்படவில்லை என பொதுமக்கள் போராட்டம் நடத்தினர். இந்த நிலையில் கிளாம்பாக்கம் பேருந்து நிலையத்தில் அமைச்சர்கள் சிவசங்கர் மற்றும் சேகர் பாபு நேற்று ஆய்வு மேற்கொண்டனர்.

பின்னர் செய்தியாளர்களைச் சந்தித்த அமைச்சர் சிவசங்கர் கூறும்போது, "கிளாம்பாக்கம் பேருந்து நிலையத்தில் வழக்கமான பேருந்துகள் இயக்கப்படுகின்றன. நள்ளிரவு நேரத்தில் எப்பொழுதுமே குறைந்த அளவிலேயே பேருந்துகள் இயக்கப்படும். கோயம்பேடு பேருந்து நிலையத்திலும் நள்ளிரவு 12 மணிக்கு மேல் குறைந்த அளவிலேயே பேருந்துகள் இயங்கின. பெரும்பாலான வெளியூர் பேருந்துகள் நள்ளிரவு 12 மணிக்கு முன்பாகவே புறப்படும்.

கிளாம்பாக்கத்தில் இருந்து போதிய பேருந்துகள் இயங்கவில்லை என்பது வதந்தி. சிலர் வேண்டுமென்றே திட்டமிட்டு பொய் வதந்திகளை பரப்பி வருகின்றனர். வெள்ளிக்கிழமை வழக்கத்தை விட திருச்சிக்கு 70 பேருந்துகள் கூடுதலாகவே இயக்கப்பட்டுள்ளது.

கிளாம்பாக்கம் பேருந்து நிலையத்தில் நள்ளிரவில் சிலர் போராட்டம் நடத்தியது சந்தேகம் அளிக்கிறது. கிளாம்பாக்கத்திற்கு நள்ளிரவு வரும் பயணிகள் ஆய்வு செய்ய உள்ளோம். கோயம்பேட்டிலிருந்து ஆம்னி பேருந்துகள் வழக்கம்போல் இயங்கும் என உரிமையாளர்கள் குழப்பம் ஏற்படுத்துகின்றனர்" என்று கூறினார்.

# இன்று

12-2-2024

சக வருடம் 1945 மாகம் 23

| | | | |
|---|---|---|---|
| சோபகிருது 29 | FEB - MON | ஷஃபான் 1 | இராசிபலன் |
| தை | திங்கள் | வளர்பிறை 043 / 323 | |

| | நல்லநேரம் | கௌரி | இராகு | குளிகை | எமகண்டம் |
|---|---|---|---|---|---|
| காலை | 6.30-7.30 | 9.30-10.30 | 07.30 | 01.30 | 10.30 |
| மாலை | 4.30-5.30 | 7.30-8.30 | 09.00 | 03.00 | [illegible] |

சூலம்: கிழக்கு. பரிகாரம்: தயிர். சூரிய உதயம்: 6.35

மேஷம் - தோல்வி, ரிஷபம் - வலிமை, மிதுனம் - நட்பு, கடகம் - ஆர்வம், சிம்மம் - அச்சம், கன்னி - உயர்வு, துலாம் - அமைதி, விருச்சி - ஜெயம், தனுசு - சுகம், மகரம் - வெற்றி, கும்பம் - வாழ்வு, மீனம் - இன்பம்

ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்

## சிந்திப்போம்.... செயல்படுவோம்







| தங்கம் | கிராம் | 22 கேரட் தங்கம் | 24 கேரட் தங்கம் |
|---|---|---|---|
| விலை | 1 கிராம் | Rs. 5,870 | Rs. 6,340 |


# சங்கரன்கோவில் சங்கரநாராயண சுவாமி திருக்கோயில் அறங்காவலர் குழு தலைவர் பதவியேற்கும் நிகழ்ச்சி



சங்கரன்கோவில் : பிப்.12–

சங்கரன்கோவில் ஸ்ரீ சங்கரநாராயண சுவாமி திருக்கோவில் அறங்காவலர் குழு உறுப்பினர்களாக வக்கீல் சண்முகையா, முப்பிடாதி, முத்துலட்சுமி, ராமகிருஷ்ணன் வெள்ளைச்சாமி, ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதில் சங்கரன்கோவில் சங்கரநாராயண சுவாமி கோயில் அறங்காவலர் குழு தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்ட மூத்த வழக்கறிஞர் சண்முகையா பதவி ஏற்கும் நிகழ்ச்சி நடந்தது. நிகழ்ச்சிக்கு கோவில் துணை ஆணைய பொறுப்பு வெங்கடேஷ் தலைமை வகித்தார். தொடர்ந்து தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ராஜா எம்எல்ஏ முன்னிலையில் அறங்காவலர் குழு தலைவராக மூத்த வழக்கறிஞர் சண்முகையா பதவி ஏற்று கொண்டார். இதில் சங்கரன்கோவில் நகராட்சி சேர்மன் உமா மகேஸ்வரி சரவணன், மதிமுக மாவட்டச் செயலாளர் சுதா பாலசுப்பிரமணியன், திமுக ஒன்றிய செயலாளர்கள் பெரியதுரை, பூசை பாண்டியன், மாவட்ட அறங்காவலர்குழு உறுப்பினர் நாராயணன், திமுக நகர செயலாளர் பிரகாஷ், வக்கீல்கள் சந்தன பாண்டியன், அன்புச்செல்வன், மருதுபாண்டி மற்றும் சண்முகராஜ் சோமசெல்வ பாண்டியன், துரை உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# புத்தாம்பூரில் சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்க சத்திய ஞான சபை திருக்குட நன்னீராட்டு பெருவிழா



புதுக்கோட்டை : பிப். 12–

புதுக்கோட்டை அருகே உள்ள புத்தாம்பூரில் சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம் சத்திய ஞான சபை திருக்குட நன்னீராட்டு பெருவிழா சிறப்பாக நடைபெற்றது.

கும்பாபிஷேகத்தை முன்னிட்டு சன்மார்க்க கொடியினை தலைவர் காத்தமுத்து ஏற்றி வைத்து வழிபாடு நடைபெற்றது. பின்னர் முதல் காலம் முதல் 6 காலம் வரை அகவை பாராயணம் நடந்தது. கோபுர கலசத்தில் சன்மார்க்க சங்கத்தின் மாநிலத் தலைவர் மருத்துவர் அருள் நாகலிங்கம் தலைமையில் கும்பாபிஷேகம் நடைபெற்றது. சன்மார்க்க சங்கத்தில் ஞான ஜோதி ஏற்றப்பட்டு, ஞான ஜோதி வழிபாடும் நடைபெற்றது.

வளாகத்தில் நடைபெற்ற சிறப்பு சொற்பொழிவு நிகழ்வில் செயலாளர் இரா.முத்தையா தலைமை தாங்கினார். புத்தாம்பூர் சன்மார்க்க சத்திய சங்க செயலாளர் ராஜேந்திரன் அனைவரையும் வரவேற்றார். மாநிலத் தலைவர் அருள் நாகலிங்கம் கலந்து கொண்டு ஏமாத்தூர் வள்ளலார் இல்ல மாணவர்கள் அனைவருக்கும் வள்ளலார் புத்தகங்களை வழங்கி சிறப்புரை ஆற்றினார். நிகழ்வில் மன்னார்குடி வள்ளலார் தாசன், பட்டுக்கோட்டை சரவணகுமார், திருமயம் பாரமலை, தஞ்சை திருஞானசம்பந்தம், கும்பகோணம் கண்ணபிரான், மரு.ராம்தாஸ், குளத்தூர் பரமசிவம், மதிப்பியல் தலைவர் இலாபராசு, மற்றும் மாணிக்கம், ராஜேந்திரன் முனைவர் நமச்சிவாயம், பேராசிரியர் அழகப்பன், அடைக்கலம், கோட்டையூர் ராசு, ஆலந்தூர் வீரமணி உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினார்கள்.

புதுக்கோட்டை மாவட்ட சன்மார்க்க சங்கத்தின் பொருளாளர் முனியமுத்து நன்றி கூறினார். மழையூர் எஸ்.சதாசிவம் திருவருட்பா இன்னிசை நிகழ்ச்சி வெகு சிறப்பாக நடைபெற்றது. நிறைவாக பெரியநாயகி, திருநாவுக்கரசு தலைமையில் ஜோதி வழிபாடு நடைபெற்றது. புதுக்கோட்டை புத்தாம்பூர் தென்னங்குடி உள்ளிட்ட சுற்றுவட்டார பொதுமக்கள் கும்பாபிஷேகத்தில் வருகை தந்து கலந்து கொண்டனர். ஏமாத்தூர் வள்ளலார் இல்ல மாணவர்கள் வள்ளலார் பற்றிய வழிபாடுகள் பாடல்களை பாடினார்கள் அனைவருக்கும் அன்னதானம் வழங்கப்பட்டது.



▶ தென்காசி மாவட்டம், புதிய பேருந்து அருகில் கே.ஆர். காலனியில் பொதிகை அறக்கட்டளையின் தலைமை அலுவலகத்தை தென்காசி தெற்கு மாவட்ட திமுக துணைச் செயலாளர், மாவட்ட கவுன்சிலரும், வழக்கறிஞருமான கனிமொழி ரிப்பன் வெட்டி திறந்து வைத்தார். பொதிகை அறக்கட்டளை ஊனமுற்றோர், வயோதிகர், நிறுவனத் தலைவர் வழக்கறிஞர் எஸ்.ஆர். கிருஷ்ணன் மற்றும் பலர் உள்ளனர்.

# முக்கண்ணாமலைப்பட்டி அரசு மேல்நிலைப்பள்ளியில் ஆண்டு விழா



அன்னவாசல் : பிப். 12,

புதுக்கோட்டை மாவட்டம், அன்னவாசல் அருகே உள்ள முக்கண்ணாமலைப்பட்டி அரசு மேல்நிலைப் பள்ளியில் ஆண்டு விழா நடைபெற்றது.

ஆண்டு விழாவிற்கு பள்ளி தலைமை ஆசிரியர் மோகன் தலைமை தாங்கினார். மன்னர் கல்லூரி ஆங்கில பேராசியர் அய்யாவு, டாக்டர் சலீம், தலைமை ஆசிரியர்கள் (வயலோகம்) ஜெயராஜ், (இலுப்பூர்) ஜான்பிரிட்டோ, டாக்டர் அமானுல்லா, அதாய் அரப்பிக்கல்லூரி முதல்வர் இம்ரான்கான் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார்கள்.

முன்னதாக பள்ளியில் நடைபெற்ற பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ மாணவிகளுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது. பின்னர் பள்ளிமாணவ, மாணவியர்களின் கலை நிகழ்ச்சிகள் நடந்தது. கலை நிகழ்ச்சியில் கலந்து கொண்ட மாணவர்கள் தங்களது தனித்திறமைகளை வெளிக்காட்டி பொதுமக்களின் பாராட்டைப் பெற்றனர்.

பள்ளியில் நடைபெற்ற ஆண்டுவிழாவில் சாகுல்அமீது, காதர்மெய்தீன், சாதிக்பாட்சா, முகமதுகனி, முபாரக், மீரான், சாமிக்கண்ணு, உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் பெற்றோர் ஆசிரியர் கழக நிர்வாகிகள், பள்ளி மேலாண்மை குழுவினர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# நாங்கள் ஆட்சிக்கு வந்தால் பணமோசடி தடுப்புச் சட்டத்தை மாற்றுவோம் : ப. சிதம்பரம்



கொல்கத்தா : பிப். 12–

காங்கிரஸ் ஆட்சிக்கு வந்தால் பணமோசடி தடுப்புச் சட்டத்தை மாற்றுவோம் என்று அக்கட்சியின் மூத்த தலைவர் ப. சிதம்பரம் தெரிவித்துள்ளார்.

கொல்கத்தாவில் நடைபெற்ற இலக்கியத் திருவிழா 2024ல் பங்கேற்று தனதுபுத்தகம்குறித்துபேசியப. சிதம்பரம், "நாங்கள் ஆட்சிக்கு வந்தால் பணமோசடி தடுப்புச் சட்டத்தை மாற்றுவோம். புதிய பணமோசடி தடுப்புச் சட்டத்தை இயற்றுவோம். தற்போதைய பணமோசடி தடுப்புச் சட்டத்தை நாங்கள் விருப்பத்தோடு அமல்படுத்தவில்லை. இந்த சட்டம் கடந்த 2002ல் நிறைவேற்றப்பட்டது. இந்த சட்டத்தை அமல்படுத்த எங்களுக்கு அழுத்தம் கொடுக்கப்பட்டது. இந்த சட்டத்தில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டது. நாங்கள் அதைச் செய்தோம். இரண்டு திருத்தங்களை நாங்கள் கொண்டு வந்தோம். நான் அறியாமல் செய்த குற்றம் அது. இந்த சட்டம் ஒரு ஆயுதமாக மாற்றப்படும் என நான் எதிர்பார்க்கவில்லை. ஒவ்வொரு சட்டமும் ஆயுதமாக மாற்றப்படுகிறது" என தெரிவித்துள்ளார்.

அமலாக்கத்துறையை மத்திய அரசு தவறாகப் பயன்படுத்துவதாக எதிர்க்கட்சிகள் தொடர்ந்து குற்றம் சாட்டி வருகின்றன. குறிப்பாக, எதிர்க்கட்சித் தலைவர்களை பழிவாங்குவதற்கான அரசியல் ஆயுதமாக அமலாக்கத்துறை பயன்படுத்தப்படுவதாக அவர்கள் குற்றம் சாட்டி வருகின்றனர். பண மோசடி தடுப்புச் சட்டத்தின் கீழ் அமலாக்கத்துறை கடும் நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. இதனால், இந்த சட்டத்தின் கீழ் பலர் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களின் சொத்துக்களும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

# ஆவுடையார்கோவில் தக்ஸ்னா ஸ்கராத்தே மற்றும் கடம்பம் பாசறை அமைப்பின் மூலம் கராத்தே தகுதி பட்டை வழங்கும் விழா



ஆவுடையார்கோவில் : பிப். 12–

புதுக்கோட்டை மாவட்டம், ஆவுடையார்கோவிலில் அம்மா பூங்காவில் நேற்று மதியம் 3 மணியளவில் தக்ஸ்னா ஸ்கராத்தே மற்றும் கடம்பம் பாசறை அமைப்பின் மூலம் கராத்தே தகுதி பட்டை வழங்கும் விழா நடைபெற்றது.

ஆவுடையார்கோவிலில் தக்ஸ்னா ஸ்காரத்தே என்ற அமைப்பின் சார்பில் கராத்தே சிலம்பம் போன்ற பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகிறது. 5 ஆண்டுகளுக்கும் மேலாக நடைபெற்று வரும் அமைப்பில் ஆண்டுதோறும் அப்பகுதியை சுற்றியுள்ள மாணவ மாணவியர்கள் 120க்கும் மேற்பட்டோர் பயிற்சி பெற்று வருகின்றனர். பயிற்சி பெற்று வரும் மாணவ மாணவியர்களுக்கு ஆண்டுக்கு ஒரு முறை தகுதி பட்டை வழங்கப்படுகிறது. வெள்ளை, மஞ்சள், பச்சை, ஊதா, காவி, கருப்பு ஆகிய நிறங்களில் தகுதியின் அடிப்படையில் தகுதி பட்டை வழங்கப்படுகிறது. 11வது ஆண்டாக நடைபெற்ற நிகழ்ச்சிக்கு உலக சாம்பியன் புதுகை சாந்தி சவுந்தர்ராஜன் கலந்து கொண்டு கராத்தே வீரர்களை உற்சாகப்படுத்தும் வகையில் பேசி தகுதி பட்டங்களையும் வழங்கினார்.

நிகழ்ச்சிக்கு மத்திய பாதுகாப்புத்துறையைசேர்ந்தமகா குரு பாலசுப்ரமணியம் கராத்தே பயிற்சி பெற்ற மாணவர்களை உற்சாகப்படுத்தி பேசி பட்டயங்களையும் வழங்கினார். நிகழ்ச்சியை மாவட்ட தலைமை பயிற்சியாளர் சண்முகம், ஒன்றிய தலைமை பயிற்சியாளர் சரவணன், பயிற்சியாளர்கள் சோமசுந்தரம், ராஜப்பா, ரமேஷ் ஆகியோர் ஒருங்கிணைத்தனர். பின்னர் பயிற்சி பெற்ற மாணவ மாணவியர்கள் தலை, கை, கால் ஆகியவற்றால் ஓடுகளை உடைத்தும், சிலம்பம் பயிற்சிகளை செய்து தங்களது திறமைகளை வெளிப்படுத்தினர். இறுதியில் மாணவ மாணவியர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டது.

# சிந்தாமணியில் புதிய ஆர்த்தோ கிளினிக் திறப்பு விழா



தென்காசி : பிப். 12–

தென்காசி மாவட்டம், திருமங்கலம் கொல்லம் தேசிய நெடுஞ்சாலையில் புளியங்குடி சிந்தாமணியில் முதல்முறையாக பாக்கியம் ஆர்த்தோ கிளினிக் திறப்பு விழா நடைபெற்றது.

இயற்கை விவசாய விஞ்ஞானி வி.அந்தோணிசாமி தலைமையில், வாசுதேவநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் மருத்துவர் தி. சதன் திருமலை குமார் முன்னிலையில், தங்கப்பழம் கல்வி குழும செயலாளர் முருகேசன் ஆர்த்தோ மருத்துவமனையை திறந்து வைத்தார். மருத்துவர் தங்க விநாயகம், சிந்தாமணி செயின் மேரிஸ் மருத்துவமனை ஹேமா மேரி, நகர்மன்ற தலைவி விஜயா குத்து விளக்கு ஏற்றினார்கள். சிந்தாமணி கண்ணா மருத்துவமனை மருத்துவர் ரவீந்திரன், புளியங்குடி ஜனதா மருத்துவமனை மருத்துவர் பால்வண்ணன், சிந்தாமணி செயின்மேரிஸ் மருத்துவமனை சேவியர், புளியங்குடி மகாலட்சுமி மருத்துவமனை சுப்பிரமணியம், நகர் மன்ற துணைத் தலைவர், புளியங்குடி நகர திமுக செயலாளர் ஆ.அந்தோணிசாமி ஆகியோர் ஆப்ரேஷன் தியேட்டர்களை திறந்து வைத்தார்கள்.

வாசுதேவநல்லூர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் மருத்துவர் துரையப்பா, புளியங்குடி தங்க விநாயகம் மருத்துவமனை மருத்துவர் கருப்பசாமி பாண்டியன், புளியங்குடி மருத்துவர் பிரகாஷ் கண்ணா, புளியங்குடி ஜெயம் மருத்துவமனை மருத்துவர் குமாரவேல், சிந்தாமணி ஜெய் ஸ்ரீ மருத்துவமனை ஜி.பாஸ்கர், புளியங்குடி தாமஸ் மருத்துவமனை மருத்துவர் தி.சுதன் தீமோத்தேயு ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாக கலந்துகொண்டனர். பாக்கியம் மருத்துவமனையில் எலும்பு நல மருத்துவம், பொதுநல மருத்துவம், எக்ஸ்ரே, பிசியோதெரபி மருந்தகம் உள்பட அனைத்து சிகிச்சை வசதிகளும் செய்யப்பட்டுள்ளது.

இந்நிகழ்ச்சியில் பி.அன்னமணி, எ.மாரியம்மாள், பி.முருகையா, எம்.பத்திரகாளி, பி.மாடசாமி, எம்.மகேஸ்வரி, பி.கருப்பசாமி, திமுக நகர துனைசெயலளார் கே. அமராவதி, ஆறுமுகச்சாமி, மாதவன், மகேஷ், பாலசுப்ரமணியம், பெருமாள், மாரிச்செல்வம், நகரத் துணைச் செயலாளர் காந்திமதி அம்மாள், முன்னாள் துணைவேந்தர் பழனிச்சாமி, நிகழ்ச்சி ஏற்பாட்டை பாக்கியம் ஆர்த்தோ மருத்துவமனை கிளினிக் மருத்துவர் கே.சுரேஷ் குமார் செய்திருந்தார். பொதுநல மருத்துவர் பிரியதர்ஷினி ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# தமிழ்நாட்டில் எந்த நேரத்திலும் பாஜக ஆட்சி அமைக்கும் பாஜக துணைத்தலைவர் பேச்சால் பரபரப்பு



சென்னை : பிப். 12,

மக்களவைத் தேர்தலுக்குப் பின் சட்டமன்றத்திற்கு தேர்தல் வராமலேகூட தமிழ்நாட்டில் பாஜக ஆட்சி அமைக்கலாம் என்று பாஜக மாநில துணைத் தலைவர் கே.பி.ராமலிங்கம் தெரிவித்துள்ளார்.

மக்களவைத் தேர்தலில் பாஜகவின் பணிகள் குறித்து மாநில பாஜக துணைத்தலைவர் கே.பி.ராமலிங்கம் நேற்று முன்தினம் சனிக்கிழமை செய்தியாளர்களிடம் பேசினார். "தேர்தலை முன்னிட்டு, பாஜக தேர்தல் பணிகளை முழு வீச்சில் மேற்கொண்டு வருகிறது. தேர்தல் பணிகளுக்காக, பணிக்குழுக்கள் உட்பட பல்வேறு குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

தமிழகத்தில் நடந்து வரும் திமுக ஆட்சியில் சட்டம், ஒழுங்கு சீர்குலைந்துள்ளது. வரும் மக்களவைத் தேர்தல், தமிழகத்தில் மிகப்பெரிய மாற்றத்தை ஏற்படுத்தும். தமிழகத்தில் மாநில தலைவர் அண்ணாமலை ஆட்சிப்பொறுப்புக்கு வர வேண்டும் என இளைஞர்கள், பெண்கள் உள்ளிட்ட அனைவரும் எதிர்பார்த்துள்ளனர். பாஜகவின் தேவை தமிழகத்துக்கு மிகுந்த அவசியமானது என்பதை மக்கள் உணர்ந்துள்ளனர்.

தமிழகத்தில் வட சென்னை முதல், கன்னியாகுமரி வரை, 39 தொகுதிகளிலும் தாமரைச் சின்னத்தில் போட்டியிடுவோம். மக்களவைத் தேர்தலுக்கு பின், சட்டப்பேரவைத் தேர்தல் வராமலேயே கூட, பாஜக தமிழகத்தில் ஆட்சி அமைக்கும் என்ற நிலை வரலாம். அதன் முன்னோட்டமாகத் தான், முன்னாள் நிர்வாகிகள், பாஜகவுக்கு வந்த வண்ணம் உள்ளனர்.

நாட்டிற்கு தேசியமும், ஆன்மிகமும் உகந்தது என்ற உணர்வுக்கு தமிழக மக்கள் வந்துள்ளனர். அதனால், தமிழகத்தில் எந்த நேரத்திலும் பாஜக ஆட்சி அமைக்கும் என்ற சூழல் உருவாகியுள்ளது" என்று தெரிவித்துள்ளார்.

### ரேஷன் கடைகளில் குடும்ப அட்டைதாரர்கள்

# கைவிரல் ரேகை வைக்கும்போது ஆவணங்கள் எதுவும் கோரக் கூடாது : தமிழ்நாடு அரசு அறிவிப்பு



சென்னை : பிப்.12–


ரேஷன் கடைகளில் குடும்ப அட்டைதாரர்கள் வசதிபடி கைரேகை பதியலாம் என்றும், கைவிரல் ரேகை வைக்கும்போது ஆவணங்கள் எதுவும் கோரக் கூடாது என்றும் தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.

தேசிய உணவுபாதுகாப்புச் சட்டத்தின்படி, முன்னுரிமை மற்றும் அந்தியோதயா அன்னயோஜனா மின்னணு குடும்ப அட்டைகளில் இணைக்கப்பட்ட அனைத்துப் பயனாளிகளின் கைவிரல் ரேகையைச் சரிபார்க்க வேண்டுமென மத்திய அரசு சுற்றறிக்கை அனுப்பியது. இதன்படி தமிழ்நாட்டில் உள்ள ரேஷன் கடைகளில் குடும்ப அட்டைதாரர்களிடம் கைரேகை பதிவு செய்யப்பட்டு வருகிறது.

இந்த நிலையில், தமிழ்நாடு உணவுப்பொருள் வழங்கல் துறை வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில்," ரேஷன் கடைகளில், அத்தியாவசிய பொருட்கள் பெறும் பயனாளிகளின் குடும்ப உறுப்பினரது விரல் ரேகை வைக்கப்படும் போது, ஆவணங்கள் எதுவும் கேட்கக்கூடாது.

ரேஷன் கார்டுதாரர்களின் வசதியின்படி ரேஷன் கடைக்கு வந்து, விரல் ரேகை பதிவு செய்து கொள்ளலாம். மாறாக, கட்டாயப்படுத்தி கடைக்கு அழைத்து சிரமம் ஏற்படுத்த கூடாது. விரல் ரேகை சரிபார்ப்பு மேற்கொள்ளவில்லை எனில், பொருட்கள் வழங்கப்படாது என்ற தவறான தகவலைக் கூறக்கூடாது என்று ஊழியர்களை அறிவுறுத்த வேண்டும்" என்று கூறப்பட்டுள்ளது.

# "மக்களவை தேர்தலில் பாஜக 370க்கும் அதிகமான இடங்களில் வெற்றி பெறும்" – ம.பி.,யில் பிரதமர் மோடி பேச்சு



ஜபுவா : பிப். 12–

வரும் மக்களவைத் தேர்தலில் பாஜக 370க்கும் அதிகமான இடங்களில் வெற்றி பெறும் என்று நேற்று பிரதமர் மோடி நம்பிக்கை தெரிவித்தார். மேலும் எதிர்க்கட்சிகள் கூட நாடாளுமன்றத்தில் ஆளும் கூட்டணி 400 இடங்களுக்கும் அதிகமான இடங்களில் வெற்றி பெறும் என்று கூறுகின்றனர் என்று தெரிவித்தார்.

மத்திய பிரதேச மாநிலம் ஜபுகா மாவட்டத்தில் பழங்குடின மக்களுக்கு மத்தியில் நடந்த பொதுக்கூட்டத்தில் பிரதமர் மோடி பேசினார். அப்போது அவர், "வரும் மக்களவைத் தேர்தலில் 543 தொகுதிகளில் 370க்கும் அதிகமான இடங்களில் பாஜக வெற்றி பெறுவதற்காக கடந்த தேர்தலில் ஒவ்வொரு வாக்குச்சாவடியிலும் பாஜக பெற்ற வாக்குகளை விட கூடுதலாக 370 வாக்குகள் பெறுவதை வாக்காளர்கள் உறுதி செய்ய வேண்டும். நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவர்கள் கூட, தேசிய ஜனநாயகக் கூட்டணிக்கு 400 இடங்கள் கிடைக்கும் என இப்போது தெரிவிக்கின்றனர். பாஜகவின் தாமரைச் சின்னம் 370க்கும் அதிகமான இடங்களில் வெற்றி பெறும் என நான் உறுதியாக நம்புகிறேன்.

நான் ஜபுகாவுக்கு தேர்தல் பிரச்சாரத்துக்காக வரவில்லை. சமீபத்தில் நடந்த மாநில தேர்தலில் மக்கள் அளித்த அளப்பரிய ஆதவுக்காக நன்றி தெரிவிக்க ஒரு சேவகனாக இங்கு வந்திருக்கிறேன். எங்களுடைய இரட்டை இயந்திர ஆட்சி மத்திய பிரதேசத்தில் இரட்டை வேகத்தில் வேலை செய்கிறது. இந்தக் கூட்டத்துக்கு வருவதற்கு முன்பாக மாநிலத்தில் ரூ.7,550 கோடி ரூபாய்க்கான வளர்ச்சித் திட்டங்களை தொடங்கி வைத்துள்ளேன். காங்கிரஸ் கட்சி நீண்ட காலமாக ஏழைகள், விவசாயிகள் மற்றும் பழங்குடிகளை புறக்கணித்து வந்துள்ளது. தேர்தல் நேரத்தில் மட்டும்தான் கிராமத்தினர், ஏழைகள், விவசாயிகள் காங்கிரஸ் கட்சியின் நினைவுக்கு வருவார்கள்.

தங்களது தோல்வியை அறிந்து கொண்ட காங்கிரஸ் மற்றும் அதன் கூட்டணிக்கட்சிகள், கடைசி தந்திரத்தை கையாளுகின்றன. கொள்ளை மற்றும் பிரித்தாளுவது என்பது காங்கிரஸ் கட்சியின் கொள்கை. கடந்த ஆண்டு மத்திய அரசு தேசிய அரிவாள் ரத்த சோகை நோய் ஒழிப்பு இயக்கம் 2047-ஐ அறிமுகப்படுத்தியது. இது அரிவாள் செல் நோயால், குறிப்பாக பழங்குடியின மக்களுக்கிடையில் ஏற்படும் சுகாதாரச் சவால்களை எதிர்கொள்வதை நோக்கமாக கொண்டது. நாங்கள் வாக்குகளுக்காக அரிவாள் ரத்த சோகை நோய்க்கான பிரச்சாரத்தை தொடங்கவில்லை. பழங்குடியினரின் நலனுக்காகவே தொடங்கி உள்ளோம்" என பிரதமர் மோடி தெரிவித்தார்.

# ஆத்துப்பாக்கம் கிராமம் அருள்மிகு ஸ்ரீ மதுசூந்தநாயகி உடனுறை ஸ்ரீ ஆதிபுரீஸ்வரர் திருக்கோவில் மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது





ஊத்துக்கோட்டை,பிப்12-

திருவள்ளூர் மாவட்டம், எல்லாபுரம் ஒன்றியம், ஆத்துப்பாக்கம் கிராமத்தில் அருள்மிகு ஸ்ரீ மதுசூந்தநாயகி உடனுறை ஸ்ரீ ஆதிபுரீஸ்வரர் திருக்கோவில் உள்ளது.

இக்கோவில் 800 ஆண்டுகளுக்கு முற்பட்ட கோவில் என்று கூறப்படுகிறது. இக்கோவிலை கிராம மக்கள் கட்டி முடித்து இன்று காலை மகா கும்பாபிஷேகம் செய்து வைத்தனர். இதை முன்னிட்டு நேற்று காலை அனுக்ஞை, விக்னேஸ்வர பூஜை, மகா கணபதி ஹோமம், லட்சுமி ஹோமம், நவகிரக ஹோமம், வாஸ்து சாந்தி அங்குரார்பணம், கும்பாலங்காரம் உள்ளிட்டவை நடைபெற்றது. இன்று காலை கோ பூஜை, நாடி சந்தானம், மகா பூர்ணாகுதி, யாத்ரா தானம் உள்ளிட்டவை நடைபெற்றது. பின்னர், கைலாய வாத்தியம், மங்கள வாத்தியம் முழுங்க புனித நீர் அடங்கிய கலசங்கள் ஊர்வலமாக கொண்டு செல்லப்பட்டது. காலை 10 மணிக்கு விமான கோபுரத்துக்கும், அதைத்தொடர்ந்து மூலவர், பரிகார மூர்த்திகளுக்கும் மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது. இதன்பின்னர், மூலவருக்கு மகா அலங்காரம் செய்யப்பட்டு மகாதீப ஆராதனை காண்பிக்கப்பட்டது. இதன் பின்னர், கோவில் வளாகத்தில் மாபெரும் அன்னதான நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில், சுற்றுவட்டாரத்தைச் சேர்ந்த ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு சுவாமி தரிசனம் செய்தனர். இந்நிகழ்ச்சியில், பல்வேறு கட்சியைச் சேர்ந்த முக்கிய பிரமுகர்களும், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகளும், அரசுத்துறை அதிகாரிகளும் கலந்து கொண்டனர். நாளை முதல் 48 நாட்கள் மண்டல அபிஷேக நிகழ்ச்சிகள் நடைபெறுகிறது. நிகழ்ச்சிகளை கிராம பொதுமக்களும், விழா குழுவினர்களும் சிறப்பாக செய்திருந்தனர்.

# 150 ஆண்டுகள் பழமை வாய்ந்த இலட்ச்சிவாக்கம் அருள்மிகு ஸ்ரீ செங்காளம்மன் கோவிலில் மகா கும்பாபிஷேகம்





ஊத்துக்கோட்டை, பிப்12-

திருவள்ளூர் மாவட்டம், எல்லாபுரம் ஒன்றியம், இலட்ச்சிவாக்கம் கிராமத்தில் பிரசித்தி பெற்ற அருள்மிகு ஸ்ரீ செங்காளம்மன் திருக்கோவில் உள்ளது. 150 ஆண்டுகள் பழமை வாய்ந்த இக்கோவிலுக்கு கடந்த 1.4.2000 அன்று மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது.

இந்நிலையில், இக்கோவிலை கிராம மக்கள் புனர் அமைத்து புதியபொலிவுடன் நேற்று காலை மகா கும்பாபிஷேகம் செய்து வைத்தனர். இதை முன்னிட்டு கடந்த வியாழக்கிழமை விநாயகர் பூஜை, அனுஞ்சை, வாஸ்து சாந்தி உள்ளிட்டவை நடைபெற்றது. வெள்ளிக்கிழமை கணபதி ஹோமம், லட்சுமி ஹோமம், நவக்கிரக ஹோமம், புதிய பிம்பங்கள் கிராமத்தில் கரிக்கோலம் வரும் நிகழ்ச்சி உள்ளிட்டவை நடைபெற்றது. சனிக்கிழமை இரண்டாம் காலை யாகசாலை பூஜைகள், அஷ்டபந்தனம் சாற்றுதல், அங்குரார்பணம், நாடி சந்தனம் உள்ளிட்டவை நடைபெற்றது. நேற்று காலை யாகசாலை பூஜைகள், ஹோமங்கள், மகா பூர்ணாகுதி, யாத்ரா தானம் உள்ளிட்டவை நடைபெற்றது. இதன் பின்னர், கைலாச வாத்தியம், செண்டை மேளம், மங்கள வாத்தியம் முழங்க, வான வேடிக்கையுடன் புனித நீர் அடங்கிய கலசங்கள் பிரகார புறப்பாடு நடைபெற்றது.

நேற்று காலை 9.30 மணிக்கு ஆலய விமான கோபுரத்துக்கு மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது. இதன் பின்னர், மூலவர் ஸ்ரீ செங்காளம்மனுக்கு மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது. இதன் பின்னர் மூலவருக்கு மகா அலங்காரம், மகா தீபாராதனை உள்ளிட்டவை நடைபெற்றது. பின்னர், பக்தர்களுக்கு தீர்த்த பிரசாதம் உள்ளிட்டவை வழங்கப்பட்டது. மதியம் கோவில் வளாகத்தில் மகா அன்னதான நிகழ்ச்சி நடைபெற்றது. இதில், சுற்று வட்டாரத்தைச் சேர்ந்த ஏராளமான பக்தர்கள், பல்வேறு கட்சிகளைச் சேர்ந்த முக்கிய பிரமுகர்கள், அரசு துறை அதிகாரிகள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர். மாலை பூக்களாலும், மின் விளக்குகளாலும் அலங்கரிக்கப்பட்ட உற்சவர் முக்கிய வீதிகளின் வழியாக பிரகார புறப்பாடு நடைபெற்றது. இன்று முதல் 48 நாட்கள் மண்டல அபிஷேக நிகழ்ச்சி நடைபெறுகிறது. நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை கிராம பொதுமக்கள், விழா குழுவினர்கள், ஊர் பெரியவர்கள், ஊர் முக்கியஸ்தர்கள் உள்ளிட்டோர் சிறப்பாக செய்திருந்தனர்.

## காரைக்கால் புதுத்துறையில் அமைய உள்ள

# கழிவுநீர் சுத்திகரிப்பு ஆலையை வேறு இடத்துக்கு மாற்ற தமிழ்நாடு தவ்ஹீத் ஜமாத் வலியுறுத்தல்

காரைக்கால், பிப்,12

தமிழ்நாடு தவ்ஹீத் ஜமாத் சார்பில் காரைக்காலில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. மாவட்டத் தலைவர் ஜெய்னுல் ஆபிதீன் தலைமையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் சிறப்பு விருந்தினராக தமிழ்நாடு தவ்ஹீத் ஜமாத்தின் மாநில பொதுச் செயலாளர் அப்துல் கரீம் கலந்து கொண்டார்.



பொதுக்கூட்டத்திற்கு முன்னதாக செய்தியாளர்களை சந்தித்த அவர் "மதசார்பற்ற இந்திய நாட்டில் பாஜக அரசு மதத்தை வைத்து மிக மோசமான அரசியலை கடந்த சில வருடங்களாக செய்து வருவதாகவும், பாபர் மசூதி நிலம் பிரச்சனைக்குரியதாக ஆக்கப்பட்ட போதே 1991-ல் இந்தியாவில் உள்ள எல்லா வழிபாட்டுத் தலங்களும் பாதுகாக்கப்படும் எனவும் இந்தியா சுதந்திரம் பெறும்போது எந்தெந்த வழிபாட்டுத்தலங்கள் எப்படி இருந்ததோ அப்படியே தொடரும் என்று இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் திருத்தம் கொண்டு வந்தார்கள் எனவும் இதனை உச்ச நீதிமன்றமும் உறுதி செய்ததாகவும் அவர் தெரிவித்தார் ஆனால் தற்போது அரசியலமைப்புச் சட்டம் காற்றில் பறக்க விடப்பட்டு, இந்தச் சட்டத்தை காப்பாற்ற வேண்டிய நீதிமன்றங்களே வழிபாட்டுத் தலங்களை பாதுகாக்கும் சட்டத்தை புறம் தள்ளிவிட்டு சில பள்ளிவாசலை குறிவைத்து கொடுக்கின்ற கூடிய வழக்குகளை எடுக்கிறார்கள் இது சட்டத்திற்கு எதிரானது எனவும் தெரிவித்தார். காரைக்கால் மாவட்டம் புதுத்துறை பகுதியில் புதிதாக அமைய உள்ள கழிவு நீர் சுத்திகரிப்பு ஆலையை மக்கள் வசிக்கக்கூடிய இடத்திற்கு மாற்ற தமிழ்நாடு தவ்ஹீத் ஜமாத் வலியுறுத்துவதாகவும் இல்லை என்றால் மக்களை திரட்டி மாபெரும் போராட்டத்தில் ஈடுபட உள்ளதாகவும் அவர் தெரிவித்தார். இப்பொதுக்கூட்டத்தில் மாவட்ட செயலாளர் பயாசுதீன், மாநில பேச்சாளர் அஜ்துர் ரஹ்மான், மாநில செயலாளர் முகமது யூசுப் ஏராளமான தமிழ்நாடு தவ்ஹீத் ஜமாத் அமைப்பினர் கலந்து கொண்டனர்.



மதுரை தேனி மெயின் ரோடு பி.பி. சாவடி காளவாசல் அருகில், ஹோட்டல் "ஸ்ரீ அன்னபூர்ணா" புதிய ஹோட்டலை உரிமையாளர் தங்கராஜ், கே.பி.எஸ்.குமார், கே.பி. புஷ்ப மெட்டல் நவநீத கிருஷ்ணன், முன்னாள் நீதி அரசர் சீனிவாசன் ஆகியோர் திறந்து வைத்து சிறப்பித்தனர். ஸ்ரீ அன்னபூர்ணா குழுமத்தினர் கலந்து கொண்டனர்.



வடசென்னை பகுதி திருவொற்றியூர் எண்ணூர் பகுதியில் மாற்றுக் கட்சியை சேர்ந்த மகளிர் அணியினர் சுமார் 70 மகளிர் இந்திய ஜனநாயக கட்சியில் இணைந்தனர் சிறப்பு அழைப்பாளராக மக்கள் தொடர்பு அலுவலர் சென்னை மண்டல தலைவி லதா வடசென்னை மாவட்ட மகளிர் அணி தலைவி சத்தியவதி வடசென்னை மாவட்ட தலைவர் குணசேகரன் சென்னை வடக்கு கடற்கரை மாவட்ட தலைவர் கோபிநாத் வடசென்னை மாவட்ட மகளிர் அணி செயலாளர் விஜயா வடசென்னை மாவட்ட பொருளாளர் சார்லஸ் வெற்றிச்செல்வன் வடசென்னை மாவட்ட இளைஞரணி செயலாளர் தருண் திருவெற்றியூர் பகுதி பிரவீன், ராமு,பிரேம் நிகழ்ச்சி ஏற்பாடுகள் முனுசாமி, மாலதி மற்றும் கட்சி நிர்வாகிகள் நிகழ்ச்சி கலந்து கொண்டனர்



செங்கல்பட்டு மாவட்டத்திற்குட்பட்ட மதுராந்தகம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட கருங்குழி பேரூராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் ஆண்டு விழா நடைபெற்றது. இதில் சிறப்பு விருந்தினராக கலந்துக்கொண்ட மகளிர் அணி இணைச் செயலாளரும் மதுராந்தகம் சட்டமன்ற உறுப்பினருமான மரகதம் குமரவேல் , கருங்குழி பேரூராட்சி செயலாளர் ஜெயராஜ் ஆகியோர் கலந்துக்கொண்டு பள்ளி மாணவ, மாணவிகளின் கலை நிகழ்ச்சியை கண்டுகளித்து பின்பு மாணவ, மாணவியர்களுக்கு பரிசு பொருட்களை வழங்கி பாராட்டி பேசினார். இந்நிகழ்வில் பேரூர் நிர்வாகிகள், மகளிர் அணியை சார்ந்த நிர்வாகிகள், மற்றும் ஆசிரியர், மாணவ மாணவிகளின் பெற்றோர்கள் பொதுமக்கள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்துக்கொண்டனர்.



செங்கல்பட்டு மாவட்டம் அனைத்து மக்கள் சக்தி இயக்கம் சார்பாக சுமார் 250-க்கும் மேற்பட்ட மாணவ - மாணவியர்களுக்கு அகராதி வழங்கும் நிகழ்ச்சியானது ஏ எச் ப்ளாக், எண் 7, எழில் நகர், பெரும்பாக்கம் குடியிருப்பு பகுதியில் நடைபெற்றது.இந்த இயக்கத்தின் தலைவர் டாக்டர் கலைமகன் வெங்கடேசன், மற்றும் மகளிர் அணியின் பொறுப்பாளர் கீதா கலைமகன். தலைமையில் நடைபெற்றது. மேலும் இவ்விழாவிற்கான ஏற்பாடுகளை செம்மஞ்சேரி ,பெரும்பாக்கம் ஒருங்கிணைப்பாளர் திவ்யா செய்திருந்தார்.மற்றும் பத்திரிகையாளர் பாலமுருகன் முன்னிலை வகித்தார். இயக்கத்தின் சட்ட ஆலோசகர் வழக்கறிஞர் ரூபன் நிகழ்ச்சியை வழிநடத்தினார்.மேலும் கல்வி மேம்பாட்டு ஆலோசகர் முனைவர் ரமேஷ்,உதவிப் பேராசிரியர்,முனைவர் குபேந்திரன், பாய்ஸ் கிளப், டர்னிங் பாயிண்ட் மாணவ மாணவியர்கள், "உன் தேடல் உன்னோடுதான்" பயிற்சி இடத்தில் பயிலும் மாலை நேர மாணவர்கள், மகளிர்அணியின் அமுத வள்ளி, பெரச்செல்வி, பானுமதி, இந்திராணி, காப்பாளர் மஞ்சுளா, "உன் தேடல் உன்னோடுதான்" ஆசிரியர்கள் கீதா,பவானி, மாணவர் அணியின் ராகவன்,செம்மஞ்சேரி செயலாளர் லஷ்மணன் , செம்மஞ்சேரி செயல் தலைவர் தேவராஜ் ,மற்றும் அனைத்து மக்கள் சக்தி இயக்கத்தின் நிர்வாகிகள் கலந்து கொண்டு இந்நிகழ்ச்சியை நடத்தி கொடுத்தனர்.



வேலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் வே. இரா. சுப்புலெட்சுமி, குடியாத்தம் நேரு பூங்காவில் நடைபெற்று வரும் சுதந்திரப் போராட்ட தியாகி தங்கோ திருவுருவ சிலை அமைக்கும் பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த ஆய்வின்போது குடியாத்தம் சட்டமன்ற உறுப்பினர் வி. அமுலு விஜயன், நகரமன்றத் தலைவர் சௌந்தரராஜன், நகராட்சி ஆணையாளர் மங்கையர்கரசன், பொதுப்பணித்துறை உதவி செயற்பொறியாளர் பன்னீர்செல்வம் உட்பட பலர் உடன் இருந்தனர்.



பஜன்கோவா ஊழல் எதிர்ப்பு, மேம்பாடு மற்றும் ஊழியர் நலச் சங்கத்தின் ஆட்சி மன்ற குழுவின் ஆலோசனை கூட்டம் நேற்று முன் தினம் இரவு காரைக்கால் மௌரியா ஓட்டலில், அச்சங்கத்தின் நிறுவனத் தலைவர், இணை பேராசிரியர், டாக்டர் எஸ்.ஆனந்த்குமார் தலைமையில் நடைபெற்றது. அச்சங்கத்தின் நிர்வாகிகளான இளநிலை பொறியாளர்கள் ஏ. சச்தானந்தம், எஸ். பச்சையப்பன், மஸ்தூர்களான எம். ரமேஷ், வி. குமார் பங்கேற்று ஆலோசனைகள் வழங்கினர். கல்லூரியின் எதிர்காலம், ஊழியர்களின் சமூக பாதுகாப்பு, மாணவ மாணவியரின் ஆரோக்கியம்,, பெற்றோர்களின் நலன் மற்றும் விவசாயிகளின் வளர்ச்சி குறித்து முக்கிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

# சந்திரபாடி மீனவர் கிராமத்தில் சமுதாய கூடம் திறப்பு விழா பூம்புகார் எம்எல்ஏ நிவேதா எம் முருகன் திறந்து வைத்தார்





தரங்கம்பாடி, பிப். 12-

மயிலாடுதுறை மாவட்டம், தரங்கம்பாடி தாலுக்கா சந்திரபாடி ஊராட்சி மீனவ கிராமத்தில் சமுதாயக்கூடம் திறப்பு விழா செம்பனார்கோவில் ஒன்றிய பெருந்தலைவர் நந்தினி ஸ்ரீதர் தலைமையில் நடைபெற்றது. ஊராட்சி மன்ற தலைவர் பிரமிளா ராஜகுமார், ஒன்றிய குழு உறுப்பினர் செல்வம் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இந்நிகழ்ச்சியில் பூம்புகார் சட்டமன்ற உறுப்பினரும் மயிலாடுதுறை மாவட்ட திமுக செயலாளருமான நிவேதா எம். முருகன் கலந்து கொண்டு ஒன்றிய பொது நிதியின் கீழ் ரூ.12 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட புதிய சமுதாயக்கூட கட்டடத்தை திறந்து வைத்து சிறப்புரையாற்றினார்.

இதில் தலைமை செயற்குழு உறுப்பினர் ஜி.என்.ரவி, தஞ்சை மண்டல தகவல் தொழில்நுட்ப அணி பொறுப்பாளர் பி.எம்.ஸ்ரீதர், ஒன்றிய செயலாளர்கள் அப்துல் மாலிக், அமுர்த. விஜயகுமார், தரங்க பேரூர் செயலாளர் முத்துராஜா மற்றும் ஆர்எஸ் அதிகாரிகள் மீனவ பஞ்சாயத்தார்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## பத்தாவது மற்றும் 12வது பொதுத் தேர்வு எழுதும் மாணவர்களை சந்தித்து

# வாழ்த்து கூறி எழுது பொருட்களை பரிசாக வழங்கிய காஞ்சிபுரம் சட்டமன்ற உறுப்பினர் சி வி எம் பி எழிலரசன்

காஞ்சிபுரம், பிப். 12-

பள்ளிகளில் 10வது மற்றும் 12வதுபயிலும்மாணவர்களுக்கு பொதுத்தேர்வு நெருங்கி வரும் நிலையில் நல்ல மதிப்பெண்ணை பெற மாணவ மாணவிகள் அயராமல் படித்து தேர்வை எதிர்கொள்ள ஆயத்தமாக தயாராகி வருகின்றனர். இந்நிலையில் காஞ்சிபுரம் சட்டமன்ற உறுப்பினர் சி.வி.எம்.பி. எழிலரசன் ஆண்டுதோறும் பொது தேர்வு எழுதும் மாணவ மாணவிகளை பள்ளிக்கு சென்று அவர்களை சந்தித்து பொது தேர்வு பயத்தை போக்க கலந்துரையாடி மாணவ மாணவிகளுக்கு பொது தேர்வு வாழ்த்துக்களை தெரிவித்து வருகின்றனர்.



இந்நிலையில் இந்த ஆண்டு சட்டமன்ற உறுப்பினர் எழிலரசன் காஞ்சிபுரம் பூக்கடை சத்திரத்திம் அருகாமையில் உள்ள புன்னகை தியாகராஜ வன்னியர் சங்க உயர்நிலைப் பள்ளியில் 10ஆம் வகுப்பு பொது தேர்வு எழுதும் மாணவர்களை சந்தித்து கலந்துரையாடி தேர்வு எழுத தேவையான பேனா,பென்சில், ஜாமென்ட்ரி பாக்ஸ் அடங்கிய கைப்பையை அனைவருக்கும் வழங்கி வாழ்த்து தெரிவித்தார்.

காஞ்சிபுரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளியில் பயிலும் 10ஆம் வகுப்பு மற்றும் 12ஆம் வகுப்பு பொது தேர்வு எழுதும் 4,680 மாணவ, மாணவிகளை பள்ளியில் சந்தித்து தேர்வு எழுதுவதற்கு தேவையான பொருட்களை கைப்பையை வழங்கி வருவதாக அவர் தெரிவித்தார். இந்நிகழ்ச்சியில் பள்ளி தலைமை ஆசிரியர்கள், ஆசிரியர்கள், உள்ளாட்சிப் பிரதிநிதிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்

# செம்பனார்கோவில் ஒன்றியத்தில் புதிய கட்டிடங்கள் திறப்பு விழா– பூம்புகார் எம்.எல்.ஏ திறந்து வைத்தார்

தரங்கம்பாடி, பிப். 12-

மயிலாடுதுறை மாவட்டம், தரங்கம்பாடி தாலுகா செம்பனார்கோவில் ஊராட்சி ஒன்றியத்துக்கு உட்பட்ட, திருக்களாச்சேரி எடுத்துக்கட்டி சாத்தனூர் திருவிடைக்கழி ஈச்சங்குடி உள்ளிட்ட ஊராட்சிகளில் பல்வேறு கட்டிடங்களின் திறப்பு விழா நிகழ்ச்சி ஒன்றிய பெருந்தலைவர் நந்தினி ஸ்ரீதர் தலைமையில் நடைபெற்றது.



நிகழ்ச்சிகளில் ஊராட்சி மன்ற தலைவர்கள் எடுத்துக்கட்டி சாத்தனூர் பைலட், திருக்களாச்சேரி ரபீக், திருவிடைகழி நாகராஜன், ஈச்சங்குடி குமார் ஆகியோர் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளராக மயிலாடுதுறை மாவட்ட செயலாளரும், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினருமான நிவேதா எம்.முருகன் கலந்துகொண்டு பொதுமக்களின் பயன்பாட்டிற்கு திறந்து வைத்து சிறப்புரையாற்றினார். ஏராளமான திமுக நிர்வாகிகள், தொண்டர்கள் பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.

## வாகனத்தை சரி செய்து தராததால்

# நான்கு சக்கர வாகன விற்பனை நிறுவனத்திற்கு அபராதம் ரூ 2. லட்சத்து 10 ஆயிரம் வழங்க நுகர்வோர் கோர்ட் உத்தரவு

நாகப்பட்டினம், பிப். 12-

மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி தாலுக்கா எருமல் கிராமத்தைச் சேர்ந்த கலியமூர்த்தி மகன் இராஜசேகர் என்பவர் தஞ்சாவூர் எஸ்.ஆர்.எஸ். கார்ஸ் பிரைவேட் லிமிடெட் கிளை நிறுவனமான மயிலாடுதுறை சேந்தங்குடியில் இயங்கி வரும் விற்பனை நிலையத்தில் மகேந்திரா & மகேந்திரா பொலிரோ B6 BS VI என்ற காரை ரூபாய் -11,62,147 கொடுத்து வாங்கியுள்ளார்.



வாங்கிய சில நாட்களிலேயே காரின் டயரில் காற்று குறைந்து கொண்டு இருந்தது, காரின் முகப்பு விளக்கு பழுது, ஸ்பாய்லர்(spoiler) பெயிண்ட் கொப்பளித்து காணப்பட்டது, டப் ஆயில் (DEF OIL), இன்ஜின் லைட் காரின் டிஸ்ப்ளேவில் தொடர்ந்து காட்டிக்கொண்டு இருந்தது இதனை சரி செய்து தரும்படி நிர்வாகத்திடம் கூறிய போது தஞ்சாவூரில் உள்ள சர்வீஸ் சென்டருக்கு காரை எடுத்து வரும்படி கூறியுள்ளனர். பலமுறை காரை சர்வீஸ் சென்டர் அனுப்பியும் அதை சரி செய்து தராமல் நிர்வாகம் அலைக்கழித்து வந்ததால் புது காரை வாங்கிய ராஜசேகர் மன உளைச்சலுக்கு உள்ளாகி உள்ளார் பின்னர் நிர்வாகத்தில் உள்ள மேல் அதிகாரிகளுக்கு கைபேசியின் வழியாகவும், கடிதத்தின் வாயிலாகவும் புகார் தெரிவித்துள்ளார்.நிர்வாகம் தனது பிரச்சினையை சரி செய்து கொடுக்காததால் தமிழ்நாடு மக்கள் சட்ட விழிப்புணர்வு மற்றும் நுகர்வோர் நல சங்கத்தினை நாடினார். அப்போது சங்கத்தின் மாநில தலைவரும், தமிழ்நாடு மற்றும் பாண்டிச்சேரி நுகர்வோர் அமைப்புகளின் கூட்டமைப்பு ஃபெட்காட் (FEDCOT)வேளாண்மை இயக்குநருமான டாக்டர் K.திருமுருகன் வழி காட்டுதலின்படி அச்சங்கத்தின் வழக்கறிஞர் P.ஜீவானந்தம் ஆலோசனையின் படியும் காரை வாங்கிய ராஜசேகர் நாகப்பட்டினம் மாவட்ட நுகர்வோர் குறைதீர் ஆணையத்தில் வழக்குத் தொடர்ந்தார்.

வழக்கினை விசாரித்த நாகப்பட்டினம் மாவட்ட நுகர்வோர் குறைதீர் ஆணையத்தின் தலைவர் P.தஷ்ணாமூர்த்தி, உறுப்பினர்கள் K.N.கமல்நாத், M.சிவகாமி செல்வி ஆகியோர் புகார்தாரருக்கு எதிர்த்தரப்பினர்கள் கூட்டாகவோ அல்லது தனித்தனியாகவோ, புகார்தாரருக்கு ஏற்பட்ட நஷ்டம், மன உளைச்சல், சேவைக் குறைபாடு, ஆகியவற்றிற்காக ரூபாய்.2,00,000/- (இரண்டு இலட்சம் மட்டும்) செலுத்த வேண்டும் என்றும்,புகார்தாரருக்கு வழக்கு செலவுத் தொகையாக ரூபாய் 10,000/- (பத்தாயிரம் மட்டும்) செலுத்த வேண்டும் என்றும், மேற்கண்ட தொகையை இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்ட நாளிலிருந்து இரண்டு மாத காலத்திற்குள் செலுத்த வேண்டும் என்றும், தவறும் பட்சத்தில் வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்ட நாள் முதல் ஆண்டுக்கு 12% வட்டி கணக்கிட்டு, தொகை முழுவதும் செலுத்தி முடிக்கும் வரை, செலுத்த வேண்டும் என்று இந்த ஆணையம் உத்தரவிடுகிறது. என தீர்ப்பளித்தனர்.

கொழும்புவில் நடைபெற்ற தேசிய அளவிலான யோகாசன போட்டியில்

# புதுக்கோட்டை ஸ்ரீ வெங்கடேஸ்வரா மெட்ரிக் பள்ளி மாணவர் சாதனை



கொழும்பு ,பிப். 12–

ஸ்ரீலங்கா தலைநகர் கொழும்புவில் ஸ்ரீலங்காநேசனல் யோகா அசோசியேசன் ஆசியன் யோகா பெடரேஷன், கொழும்பு சிவ விஷ்ணு யோகா பீடம் இணைந்து நடத்திய சர்வதேச யோகா போட்டி – 2024–ல் மலேசியா, சிங்கப்பூர், இந்தியா, பாகிஸ்தான். ஹாங்காங், அமெரிக்கா போன்ற பத்திற்கும் மேற்பட்ட நாடுகளில் இருந்து பங்கேற்றனர். இதில் இந்தியாவின் தமிழ்நாடு மாநிலம் புதுக்கோட்டை மாவட்டம் ஸ்ரீ வெங்கடேஸ்வரா மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியின் ஆத்மா யோகா மாணவர் மன்றத்தின் மாணவர்கள் பரிசு பெற்று சாதனை புரிந்தனர்.

இதில் ஒட்டு மொத்தமாக ஆண்களுக்கான பிரிவில் பா.சஞ்சீத்பாபு சர்வதேச யோகாசன சாம்பியன் – 2024 பட்டம் வெற்று சாதனை புரிந்தார். 8–வயதிற்கு உட்பட்ட மாணவர்கள் பிரிவில் பா.சுர்ஜீத் பாபு முதலிடமும் பிடித்து நமது பள்ளிக்கும்.இந்திய மண்ணிற்கும் பெருமை சேர்த்துள்ளார்கள் இவர்களுக்கு ஸ்ரீலங்கா கல்வி இலாக்கா அமைச்சர் அரவிந்தகுமார் சேம்பியன் கேப்பை மற்றும் சான்றிதழுடன் பரிசுத்தொகையும் வழங்கி பாராட்டினார். பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன், இந்திய தூதரகச் செயலாளர் நவ்யா சிங்லா வெற்றி பெற்றவர்களைப் பாராட்டினர். விழாவிற்கான ஏற்பாட்டினை சிவ விஷ்னு யோகா பீடத்தின் நிறுவனர் யோகாச்சார்யா ராஜ்குமார். ஆசியன் யோகா பெடரேஷன் பொருப்பாளர் ராதாகிருஷ்ணன் மற்றும் விழா குழுவினர் செய்திருந்தனர்.

மு.க.ஸ்டாலினின் அதிரடி வியூகம்

# மக்களவை தேர்தலுக்காக திமுக வார் ரூம் அமைப்பு



சென்னை : பிப். 12,

மக்களவைத் தேர்தல் பணிகளை ஒருங்கிணைக்க திமுக சார்பில் வார் ரூம் அமைக்கப்பட்டுள்ளளது.

மக்களவைத் தேர்தல் தேதி விரைவில் அறிவிக்கப்படும் என எதிர்பார்க்கப்படும் சூழ்நிலையில், தேர்தலை எதிர்கொள்ளும் பணியில் அனைத்துக் கட்சிகளும் இறங்கியுள்ளன. இதற்காக தேர்தல் கூட்டணி, தொகுதி தேர்வு, தேர்தல் அறிக்கை தயாரிப்பு என அனைத்துக் கட்சிகளும் அதற்கான பணிகளில் ஈடுபட்டுள்ளன. அத்துடன் பேச்சுவார்த்தைகளிலும் ஈடுபட்டு வருகின்றன.

இந்த நிலையில் மக்களவைத் தேர்தலுக்காக கூட்டணி கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தவும், தொகுதி பங்கீடு குறித்து பேசவும், தேர்தல் அறிக்கை தயார் செய்யவும் திமுக மூன்று குழுக்களை அமைத்துள்ளது. இந்த நிலையில் மக்களவைத் தேர்தல் பணிகளை ஒருங்கிணைக்க திமுக சார்பில் வார் ரூம் அமைக்கப்பட்டுள்ளது.

அதன்படி, தொகுதி பார்வையாளர்கள் ஒருங்கிணைப்பு, பூத் கமிட்டி, பரப்புரை மேற்பார்வை ஆகியவற்றை திமுக இணை அமைப்பு செயலாளர் அன்பகம் கலை மேற்கொள்வார்.

ஊடக விவாதக் குழு, நட்சத்திர பேச்சாளர்கள் பரப்புரை போன்ற பணிகளை மேற்கொள்ள திமுக துணை அமைப்பு செயலாளர் ஆஸ்டின் தலைமையிலான குழு செயல்படும். சட்டக்குழு மற்றும் தேர்தல் ஆணையம் உள்ளிட்ட பணிகளை மேற்கொள்ள திமுக சட்டத்துறை செயலாளர் என்.ஆர்.இளங்கோ எம்.பி தலைமையிலான குழு செயல்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், ஒவ்வொரு மாவட்டத்திலும் தலா ஒரு வார் ரூம் அமைக்கப்படும் என்றும் திமுக. தலைமை அறிவித்துள்ளது.

# புதுக்கோட்டையில் தமிழக சத்துணவு ஊழியர்கள் சங்கத்தின் செயற்குழு கூட்டம்



புதுக்கோட்டை, பிப். 12,

புதுக்கோட்டையில் தமிழக சத்துணவு ஊழியர்கள் சங்கத்தின் செயற்குழு கூட்டம் அறிவியல் கூட்ட அரங்கில் நடைபெற்றது.

கூட்டத்திற்கு மாவட்ட தலைவர் கே.சுப்பிரமணியன் தலைமை தாங்கினார். மாவட்ட செயலாளர் எஸ். அம்பிகாவதி ஆண்டறிக்கை வாசித்து அனைவரையும் வரவேற்றார். கூட்டத்தில் பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது. முன்னாள் மாவட்ட தலைவர் எ.கோவிந்தராஜன், மாநில பொருளாளர் பி.நாகராஜன் கலந்துகொண்டு தீர்மானங்களை முன்மொழிந்தனர்.

தீர்மானம் 1 – உடனடியாக காலி பணி இடங்களை நிரப்ப வேண்டும். தீர்மானம் 2 – சத்துணவு ஊழியர்களை நிரந்தரம் செய்ய வேண்டும். தீர்மானம் 3 – ஓய்வு பெற்ற சத்துணவு ஊழியர்கள் ஊழியர்களுக்கு முறையான ஓய்வு ஊதியம் வழங்க வேண்டும். தீர்மானம் 4 – உணவு மானியம் உயர்த்தி வழங்க வேண்டும். தீர்மானம் 5 – ஒட்டுமொத்த ஓய்வூதியம் 5,000 ஆயிரம் வழங்க வேண்டும் உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது. கூட்ட முடிவில் கரம்பக்குடி ஒன்றிய ராஜேந்திரன் நன்றி கூறினார்.

# மன்னகுடி ஸ்ரீ அய்யனார் திருக்கோயில் மஹா கும்பாபிஷேக விழா



அறந்தாங்கி : பிப். 12–

புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி அருகே மன்னகுடி கிராமத்தில்பிரசித்திபெற்ற பூர்ண புஷ்கலாம்பாள் சமேத ஸ்ரீ அய்யனார் ஸ்ரீ விநாயகர் ஸ்ரீ முருகன் ஸ்ரீ பத்ரகாளி அம்மன் ஸ்ரீ முன்னோடியான் சுவாமி திருக்கோயில்கள் அமைந்துள்ளது.

பிரசித்தி பெற்ற இக்கோயில் கும்பாபிஷேகம் செய்வதென அப்பகுதி கிராமத்தார்களால் முடிவு செய்யப்பட்டு கோவில் புணரமைப்பு பணிகள் முடிவுற்ற நிலையில் சிறப்பான யாகசாலை பூஜை அமைக்கப்பட்டு நேற்று முன்தினம் சனிக்கிழமை கணபதி ஹோமத்துடன் முதற்காலையாக பூஜை தொடங்கியது விழாவின் முக்கிய நாளான நேற்று இரண்டாம் கால யாக பூஜை நிறைவுற்று மேளதாளங்களுடன் கடம்புறப்பாடு நிகழ்வு நடைபெற்றது. கடம் புறப்பாடானது கோவிலை சுற்றி வளம் வந்த பின்னர் கோபுர கலசத்தை அடைந்தது. சுப்பிரமணியபுரம் பாலசுப்பிரமணிய குருக்கள் தலைமையிலான சிவாச்சாரியார்கள் வேத மந்திரங்கள் முழங்க மஹா கும்பாபிஷேகம் நடைபெற்றது.

கும்பாபிஷேக நிகழ்ச்சியில் மன்னகுடி, சுப்பிரமணியபுரம், பிடாரிகாடு, அரசர்குளம், கொடிவயல், மங்களநாடு, நாகுடி உள்ளிட்ட சுற்று வட்டார கிராமங்களிலிருந்து 5 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு கோபுர தரிசனம் செய்தனர். கும்பாபிஷேக நிகழ்ச்சியில் கலந்து கொண்ட அனைவருக்கும் அன்னதானம் வழங்கப்பட்டது. நாகுடி போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டனர்.

# சென்னையில் இன்று தமாகா செயற்குழு கூட்டம் : பலம் அறிய ஜி.கே.வாசன் திட்டம்



சென்னை, பிப். 12–

தமாகா செயற்குழு கூட்டம் சென்னையில் இன்று நடைபெறுகிறது. இதில் கட்சியின் தலைவர் ஜி.கே.வாசன் மாவட்ட வாரிய கட்சியின் பலம் அறிய திட்டமிட்டிருப்பதாக கூறப்படுகிறது.

தமிழகத்தில் பாஜகவை வளர்த்தெடுக்க அதிமுகவுடன் கூட்டணி அமைத்து மக்களவை தேர்தலை எதிர்கொள்ள விரும்புகிறது. ஆனால் அதிமுக பொதுச் செயலாளர் பழனிசாமியோ, பாஜகவுடன் கூட்டணி இல்லை என்பதில் திட்டவட்டமாக இருக்கிறார். அதனால் அனைத்து கட்சிகளுடனும் மென்மையான போக்கை கடைபிடித்து வரும் தமாகா தலைவர் ஜி.கே. வாசனை பாஜக தூது அனுப்பி அதிமுகவை கூட்டணிக்கு அச்சாரமிடுவதாக அரசியல் வட்டாரங்களில் கூறப்படுகிறது.

தமிழகத்தில் மோடி, அமித் ஷாவுக்கு நெருக்கமான நபராக கருதப்படும் வாசன், தமிழகத்தில் தனது கட்சியின் பலத்தை அறிய திட்டமிட்டிருப்பதாக கூறப்படுகிறது. இதற்காக இன்று சென்னையில் தமாகா செயற்குழு கூட்டம் நடக்கும் என வாசன் தெரிவித்துள்ளார். கட்சியின் மாநில நிர்வாகிகள், மாவட்டத் தலைவர்கள், மாநில செயற் குழு உறுப்பினர்கள் மற்றும் மாநில துணை அமைப்பு தலைவர்கள் பங்கேற்கும் இக்கூட்டத்தில் கூட்டணி தொடர்பாகவும் விவாதிக்க இருப்பதாகக் கூறப்படுகிறது.

குறிப்பாக மாவட்ட அளவில் தமாகா எவ்வளவு பலம் பெற்றுள்ளது என்பது குறித்து விவாதிக்க இருப்பதாகவும், அதன் அடிப்படையில் கூட்டணி கட்சிகளிடம் தொகுதிகளை கேட்டு பெறுவது என்றும் முடிவெடுத்து இருப்பதாகக் கூறப்படுகிறது.

# தினையாகுடி – திருநெல்லிவயல் கிராமத்தில் முதலாம் ஆண்டு மாட்டுவண்டி பந்தயம்



அறந்தாங்கி : பிப். 12–

புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி அருகே தினையாகுடி - திருநெல்லிவயல் கிராமத்தில் முதலாம் ஆண்டு மாபெரும் மாட்டுவண்டி பந்தயம் நடைபெற்றது.

நடுமாடு, சின்னமாடு என இருபிரிவுகளாக நடைபெற்ற போட்டியில் புதுக்கோட்டை, தஞ்சாவூர், ராமநாதபுரம், சிவகங்கை, மதுரை, திருச்சி உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களில் இருந்து கொண்டுவரப்பட்ட 80–க்கும் மேற்பட்ட மாட்டுவண்டிகள் கலந்து கொண்டன. போட்டியில் கலந்து கொண்ட மாட்டு வண்டிகள் நிர்ணயிக்கப்பட்ட பந்தைய இலக்கினை நோக்கி சீறிப்பாய்ந்தன. பந்தைய போட்டியில் கலந்து கொண்டு வெற்றி பெற்ற மாட்டின் உரிமையாளர்களுக்கு மொத்தம் ஒரு லட்ச ரூபாய் ரொக்கப்பரிசும், கோப்பைகளும் வழங்கப்பட்டது. பந்தைய நிகழ்ச்சியை சாலையின் இருபுறமும் நின்று ஆயிரக்கணக்கானோர் கண்டு ரசித்தனர்.

# முக்கண்ணாமலைப்பட்டி அரசு மேல்நிலைப்பள்ளியில் ஆண்டு விழா




அன்னவாசல் , பிப். 12–

அன்னவாசல் அருகே உள்ள முக்கண்ணாமலைப்பட்டி அரசு மேல்நிலைப் பள்ளிகளில் ஆண்டு விழா நடந்தது.

புதுக்கோட்டை மாவட்டம் அன்னவாசல் அருகே உள்ள முக்கண்ணாமலைப்பட்டி அரசு மேல்நிலைப் பள்ளியில் நடந்த ஆண்டு விழாவிற்கு பள்ளி தலைமை ஆசிரியர் மோகன் தலைமை தாங்கினார். இதில் மன்னர் கல்லூரி ஆங்கில பேராசியர் அய்யாவு, டாக்டர் சலீம் தலைமை ஆசிரியர்கள் (வயலோகம்) ஜெயராஜ், (இலுப்பூர்) ஜான்பிரிட்டோ டாக்டர் அமானுல்லா, அதாய் அரப்பிக்கல்லூரி முதல்வர் இம்ரான்கான், ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார்.

முன்னதாக போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ மாணவிகளுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது பின்னர் மாணவ மாணவியர்களின் கலை நிகழ்ச்சிகள் நடந்தது இதில் சாகுல்அமீது, காதர்மெய்தீன், சாதிக்பாட்சா, முகமதுகனி, முபாரக், மீரான், சாமிக்கண்ணு, உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் பெற்றோர் ஆசிரியர் கழக நிர்வாகிகள் பள்ளி மேலாண்மை குழுவினர்கள் கலந்து கொண்டானர்.

# மற்ற மாநிலங்களுக்கு முன்னோடியாக தமிழகத்தில் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது – அமைச்சர் உதயநிதி பேச்சு






திருப்பூர் : பிப். 12–

திருப்பூர் சிக்கண்ணா அரசுகல்லூரிவளாகத்தில் நேற்று புதிய குடிநீர் திட்டங்கள் தொடக்க விழா நடைபெற்றது. இதில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கலந்து கொண்டு புதிய குடிநீர் திட்டப்பணிகள் உள்பட பல்வேறு முடிவுற்ற திட்டப்பணிகளை தொடங்கி வைத்து பேசினார்.

அப்போது அவர் கூறியதாவது:- தமிழக நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சார்பில் திருப்பூர் மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளுக்கு ரூ.1120.57 கோடி மதிப்பில் புதிய குடிநீர் திட்டப்பணிகள், ரூ.70.43 கோடி மதிப்பில் திருப்பூர் ஊராட்சி ஒன்றியத்தை சேர்ந்த 165 ஊரக குடியிருப்புகளுக்கான கூட்டு குடிநீர் திட்டப்பணிகள், ரூ.53.48 கோடி மதிப்பில் புதிய பல்நோக்கு கூடம் மற்றும் ரூ.12.87 மதிப்பில் புதிய பன்னடுக்கு வாகன நிறுத்தம், 15-வது நிதி குழு மானியத்தின் கீழ் ரூ.72.92 லட்சம் மதிப்பில் திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்கென 10 எண்ணிக்கையிலான இலகுரக வாகனங்கள் ஆகியவை தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

அரசின் பல்வேறு துறைகள் சார்பில் 5ஆயிரம் பேருக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளது. மொத்தம் ரூ.1362 கோடி மதிப்பில் திட்டங்கள் தொடங்கி வைக்கப்பட்டுள்ளன. வந்தாரை வாழ வைக்கும் தமிழ்நாடு என்ற பெயர் தமிழகத்திற்கு உண்டு. அது திருப்பூரை மனதில் வைத்துதான் சொல்லப்படுகிறது. 3 நாட்களுக்கு முன்பு பெரியார் மண்ணான ஈரோட்டில் ரூ.310 கோடி மதிப்பிலானதிட்டங்களை தொடங்கி வைத்தேன். இந்தவிழாவில் பங்கேற்க வரும் போது மகளிர் சுய உதவி குழுவினர் உற்சாக வரவேற்பு அளித்தனர். எனது இல்லத்தில் பயன்படுத்தப்படும் பொருட்கள் மகளிர் சுய உதவி குழுக்களால் தயாரித்த பொருட்கள்தான். முதலமைச்சர் மு.க.ஸ்டாலினும் கூட மகளிர் சுய உதவிக்குழு பொருட்களைத்தான் பயன்படுத்துகிறார்.

சட்டமன்றத்தில்பேசும் போது உறுப்பினர்கள் அனைவரும் மகளிர் சுய உதவி குழு பொருட்களை பயன்படுத்த வேண்டும் என்றார். ஏனென்றால் அந்த அளவுக்கு பொருட்கள் தரமாக இருப்பதுதான். அமைச்சராக பொறுப்பேற்றபிறகு நான் முதல்-முறையாகதிருப்பூர் வந்துள்ளேன். திருப்பூர் நிகழ்ச்சி முடிந்ததும் கோவையில் நடைபெறும் நிகழ்ச்சியில் பங்கேற்க செல்கிறேன்.

தமிழகத்தின் எதிர்கால தேவைகளை கருத்தில் கொண்டு முதல்–அமைச்சர் மு.க.ஸ்டாலின் திட்டங்களை செயல்படுத்தி வருகிறார். பெரியார் அண்ணா கலைஞர் ஆகியோரின் மொத்த உருவமாக முதல்வர் உள்ளார். மாநில நிதி சுமையை மீறி திட்டங்களை செயல்படுத்தி கொண்டிருக்கிறார். மற்ற மாநிலத்தவர்கள் ஜி.எஸ்.டி என்பது என்னவென்று தெரியாமல் படித்து கொண்டிருந்த போது அதன் பாதகங்களை மக்களிடம் கொண்டு சென்றவர்கள் திருப்பூர் மக்கள் தான்.

நாம் மத்திய அரசுக்கு 5 ஆண்டுகளில் கொடுத்த வருவாய் ரூ. 6 லட்சம் கோடி. ஆனால் அவர்கள் நமக்கு திருப்பி கொடுத்தது ரூ.1லட்சத்து 58 ஆயிரம் கோடி மட்டுமே. 1 ரூபாய்க்கு 23 பைசா மட்டுமே தருகின்றனர். அமைச்சர் கே.என் நேரு கழகத்திற்கு மட்டும் முதன்மை செயலாளர் அல்ல. மக்களின் களப்பணியில் முதன்மையானவர். திராவிட இயக்கம், திராவிட மாடல் அரசு அன்றைய தேவையை சிந்தித்து திட்டங்களை செயல்படுத்தி வருகிறோம். 2024க்கு மட்டுமல்ல 2040ம் ஆண்டு மக்கள் தொகையை கணக்கில் கொண்டு திருப்பூருக்கு குடிநீர் உள்ளிட்ட திட்டத்தை வழங்கியுள்ளோம்.

தொழில்துறையினர் நீண்டநாள்கோரிக்கையை ஏற்று மாநாட்டு அரங்கம் மிகப்பெரிய அளவில் கட்டி திறக்கப்பட்டுள்ளது. இந்த திட்டங்கள் எல்லாம் திருப்பூர் வளர்ச்சியை அடுத்த கட்டத்திற்கு கொண்டு செல்லும். மகளிருக்கு உதவித்தொகை, அரசு பேருந்தில் இலவச பயணம், கல்லூரி மாணவிகளுக்கு ஊக்கத்தொகை, இல்லம் தேடி கல்வி என அடுத்தடுத்ததிட்டங்களை செயல்படுத்தி வருகிறார் முதல்வர். தெலுங்கானாவில்இருந்து வந்து நம் திட்டங்களை பார்த்து செல்கின்றனர். மற்ற மாநிலங்களுக்கு முன்னோடியாக தமிழகத்தில் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. விளையாட்டு துறையிலும் நாம் சாதித்து வருகிறோம். இதற்கு பல்வேறு விருதுகளும் கிடைத்து வருகிறது.

இந்த அரசு மக்களுக்கான திட்டங்களை தருகிறது. பாராட்டும் நன்மதிப்பும் எட்டு திக்குகளில் இருந்தும் நமக்கு கிடைக்கிறது. நீங்கள் பயனாளிகள் அல்ல. இந்த அரசின் பங்கேற்பாளர்கள். நீங்கள் ஒவ்வொருவரும் முதல்வரின் முகமாக இங்கு இருக்கிறீர்கள். அரசின் திட்டங்களை எடுத்துசொல்லவேண்டும் என்று அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேசினார்.

# வரும் 16, 17, 18 தேதிகளில் நாடாளுமன்றத் தொகுதி வாரியாக பரப்புரை கூட்டங்கள் துரைமுருகன் அறிவிப்பு



சென்னை ,பிப். 12–

வரவிருக்கும் நாடாளுமன்றத் தேர்தலை முன்னிட்டு, கடந்த பத்தாண்டு காலத்தில் மத்திய பாஜக அரசு, தமிழ்நாட்டுக்கு இழைத்த அநீதிகளையும், மத்திய அரசிடம் மாநிலத்தின் உரிமைகளை அடகு வைத்து தற்போது நாடகமாடும் அடிமை அதிமுகவின் துரோகங்களையும் மக்களிடம் கொண்டு சேர்க்கும் வகையில், வரும் 16, 17 மற்றும் 18 ஆகிய நாட்களில் நாடாளுமன்றத் தொகுதி வாரியாக திமுக சார்பில் பரப்புரைக் கூட்டங்கள் நடைபெறும் என்று அக்கட்சியின் பொதுச்செயலாளர் துரைமுருகன் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், "2021 சட்டமன்றத் தேர்தலுக்கு முன்பாக அதிமுக அரசின் பத்தாண்டு கால முறையற்ற நிர்வாகம், மக்களின் குறைகள், துன்பங்களை நேரடியாகக் கேட்டறிந்திட கட்சி முன்னணியினர் ’விடியலை நோக்கி ஸ்டாலினின் குரல்’ என்ற பரப்புரையில் பங்கேற்று அதிமுகவை மக்கள் நிராகரிப்பதற்கான அடித்தளமிட்டனர். வரவிருக்கும் நாடாளுமன்றத் தேர்தல் 2024-ல் கடந்த பத்தாண்டு காலத்தில் மத்திய பாஜக அரசு, தமிழ்நாட்டுக்கு இழைத்த அநீதிகளையும், மத்திய அரசிடம் மாநிலத்தின் உரிமைகளை அடகு வைத்து தற்போது நாடகமாடும் அடிமை அதிமுகவின் துரோகங்களையும் மக்களிடம் கொண்டு சேர்க்கும் வகையில், முதற்கட்டமாக, கட்சி முன்னணியினர், "உரிமைகளை மீட்க ஸ்டாலினின் குரல்" என்ற தலைப்பில் நாடாளுமன்றத் தொகுதி வாரியான கூட்டங்களில் பங்கேற்று சிறப்புரையாற்ற உள்ளனர்.

தமிழ்நாட்டின் உரிமைகளை மீட்டெடுக்க திமுக தலைவரின் குரலாக வரும் 16, 17 மற்றும் 18 ஆகிய நாட்களில் நடைபெறும் பரப்புரைக் கூட்டங்களை பொறுப்பு அமைச்சர்களுடன் இணைந்து, நாடாளுமன்றத் தொகுதிக்குட்பட்ட மாவட்டச்செயலாளர்கள் சம்பந்தப்பட்ட சட்டமன்றத் தொகுதிகளைச் சார்ந்த மாவட்ட நிர்வாகிகள், சார்பு அணியினர், பகுதி-ஒன்றிய-நகர-பேரூர் கழகச் செயலாளர்கள், கிளைச் செயலாளர்கள், பூத் கமிட்டியினர் ஆகியோர் பங்கேற்கும் பிரம்மாண்ட கூட்டங்களாக நடத்திட வேண்டும்.

வரும் 16ம் தேதி, சிவகங்கை, திருநெல்வேலி, விழுப்புரம், தூத்துக்குடி, கடலூர், ஸ்ரீபெரும்புதூர், ஈரோடு, நாமக்கல், கன்னியாகுமரி, மயிலாடுதுறை, மற்றும் திருவண்ணாமலை நாடாளுமன்றத் தொகுதிகளில் பரப்புரைக் கூட்டங்கள் நடைபெறும். வரும் 17-ம் தேதி, கிருஷ்ணகிரி, திருச்சி, திருப்பூர், அரக்கோணம், மதுரை, விருதுநகர், ராமநாதபுரம், வேலூர், கள்ளக்குறிச்சி, கோவை, திண்டுக்கல் மற்றும் சிதம்பரம் நாடாளுமன்றத் தொகுதிகளிலும், வரும் 18-ம் தேதி, திருவள்ளூர், தஞ்சாவூர், பெரம்பலூர், கரூர், புதுச்சேரி, பொள்ளாச்சி, காஞ்சிபுரம், தருமபுரி, நாகப்பட்டினம், தேனி, நீலகிரி, தென்காசி, சேலம் மற்றும் ஆரணி நாடாளுமன்றத் தொகுதிகளிலும் பரப்புரைக் கூட்டங்கள் நடைபெறும்" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

PUDUGAI VARALARU – National Tamil Daily : Published by S.Sivasakthivel at Plot No.1103,Periyar Nagar, Rajagopalapuram Post,Pudukkottai-622003,TamilNadu State and Printed at V.C Printograph, 144,M.K Kottai Road, Elumalaiyan Rice Mill Complex, Ambigapuram, Ariyamangalam, Tiruchirappalli-620010, TamilNadu State. Editor: S.Sivasakthivel, Phone : 04322-261577, E.Mail: pudugaivaralaru@gmail.com.

வரலாறு விளையாட்டு

# சென்னை ஓபன் டென்னிஸ்

## ராம்குமார் – மைனெனி ஜோடி ‘சாம்பியன்’



**சென்னை : பிப். 12,**

**வெற்றிபெற்ற ராம்குமார்-மைனெனி கூட்டணிக்கு ரூ.6¼ லட்சம் பரிசாக வழங்கப்பட்டது.**

சென்னை ஓபன் சேலஞ்சர் டென்னிஸ் போட்டி நுங்கம்பாக்கத்தில் உள்ள எஸ்.டி.ஏ.டி. ஸ்டேடியத்தில் நடந்துவருகிறது. இதில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு நடந்த இரட்டையர் பிரிவு இறுதிப்போட்டியில் இந்தியாவின் ராம்குமார்-சகெத் மைனெனி ஜோடி சரிவில் இருந்து மீண்டு 3-6, 6-3, 10-5 என்ற செட் கணக்கில் சகநாட்டவரான ரித்விக் சவுத்ரி போலிபள்ளி-நிக்கி பூனச்சா இணையை வீழ்த்தி சாம்பியன் பட்டத்தை கைப்பற்றியது. வெற்றி பெற்ற ராம்குமார்-மைனெனி கூட்டணிக்கு ரூ.6¼ லட்சம் பரிசாக வழங்கப்பட்டது.

முன்னதாக நடந்த ஒற்றையர் பிரிவு அரைஇறுதி ஆட்டம் ஒன்றில் இந்திய வீரர் சுமித் நாகல் 6-3, 6-4 என்ற நேர்செட்டில் டாலிபோர் ஸ்வர்சினாவை (செக்குடியரசு) தோற்கடித்து இறுதிப்போட்டிக்கு முன்னேறினார். மற்றொரு அரைஇறுதியில் இத்தாலி வீரர் லூகா நார்டி 6-4, 4-6, 7-6 (8-6) என்ற நேர்செட்டில் சீன தைபேயின் சுன் ஹின்னை சாய்த்து இறுதிப்போட்டிக்குள் நுழைந்தார். இந்த ஆட்டம் 3 மணி நேரம் நீடித்தது.

# நான் தேர்வு செய்த ஒரு வீரர் இந்திய கிரிக்கெட்டையே மாற்றிவிட்டார் – ரவி சாஸ்திரி பெருமிதம்



**மும்பை : பிப். 12,**

**டெஸ்ட் கிரிக்கெட்டில் விராட் கோலியுடன் சேர்ந்து விளையாடுவதற்கு பும்ரா மிகுந்த ஆர்வத்துடன் இருந்ததாக ரவி சாஸ்திரி தெரிவித்துள்ளார்.**

இங்கிலாந்துக்கு எதிராக விசாகப்பட்டினத்தில் நடைபெற்ற 2வது டெஸ்ட் போட்டியில் இந்தியா 106 ரன்கள் வித்தியாசத்தில் வென்றது. அதனால் முதல் போட்டியில் வெற்றி பெற்ற இங்கிலாந்துக்கு தக்க பதிலடி கொடுத்த இந்தியா தொடரை 1-1 என்ற கணக்கில் சமன் செய்துள்ளது. அந்த போட்டியில் மொத்தம் 9 விக்கெட்டுகள் எடுத்த ஜஸ்பிரித் பும்ரா ஆட்டநாயகன் விருது வென்று இந்தியா வெற்றி பெற முக்கிய பங்காற்றினார்.

மேலும் அந்த போட்டியில் வெளிப்படுத்திய செயல்பாடுகளின் காரணமாக ஐசிசி டெஸ்ட் டாப் 10 பவுலர்களுக்கான தரவரிசை பட்டியலில் பும்ரா முதலிடத்திற்கு முன்னேறியுள்ளார். அத்துடன் டெஸ்ட், ஒருநாள் டி20 ஆகிய 3 விதமான ஐசிசி டாப் 10 பவுலர்களுக்கான தரவரிசையில் நம்பர் ஒன் இடத்தை பிடித்த முதல் வீரர் என்ற தனித்துவமான உலக சாதனையையும் பும்ரா படைத்துள்ளார்.

முன்னதாக வித்தியாசமாக பந்து வீசும் பவுலிங் ஆக்சனை கொண்ட பும்ரா 2016-ல் அறிமுகமாகி ஒருநாள் மற்றும் டி20 போட்டிகளில் அசத்தியபோது மிகவும் கடினமான டெஸ்ட் கிரிக்கெட்டில் அசத்த முடியாது என்ற விமர்சனங்கள் எழுந்தன. ஆனால் 2018-ல் டெஸ்ட் கிரிக்கெட்டிலும் அறிமுகமான பும்ரா தற்போது நம்பர் 1 பவுலராக முன்னேறி தன் மீதான விமர்சனங்களை பொய்யாக்கி சாதனை படைத்துள்ளார்.

இந்நிலையில் டெஸ்ட் கிரிக்கெட்டில் சாதிக்க முடியாது என்ற விமர்சனங்களை சந்தித்த பும்ராவை 2018-ல் தாம் பயிற்சியாளராக இருந்தபோது தேர்வு செய்ததாக ரவி சாஸ்திரி பெருமிதம் தெரிவித்துள்ளார். அவர் தற்போது இந்திய கிரிக்கெட்டின் பவுலிங் துறையையே மாற்றி விட்டார் என்பதை நினைத்து மகிழ்ச்சியை வெளிப்படுத்தும் அவர் இது குறித்து சமீபத்திய பேட்டியில் பேசியது பின்வருமாறு;-

“கொல்கத்தாவில் இருந்தபோது முதல் முறையாக அவரை நான் போனில் அழைத்தது இன்னும் நினைவில் இருக்கிறது. அப்போது அவரிடம் டெஸ்ட் கிரிக்கெட்டில் விளையாட உங்களுக்கு விருப்பம் இருக்கிறதா என்று கேட்டேன். அதற்கு டெஸ்ட் கிரிக்கெட்டில் விளையாடுவது தம்முடைய வாழ்வின் மிகப்பெரிய நாள் என்று பும்ரா சொன்னார். அந்த சமயத்தில் அவர் வெள்ளைப்பந்து கிரிக்கெட்டர் என்ற பெயருக்குள்ளானார்.

இருப்பினும் சாதிக்க முடியும் என்ற பசி அவரிடம் இருந்தது எனக்கு தெரியும். அதனால் நீங்கள் தயாராக இருங்கள் உங்களை தென் ஆப்பிரிக்காவில் அறிமுகப்படுத்துகிறேன் என்று அவரிடம் சொன்னேன். டெஸ்ட் கிரிக்கெட்டில் குறிப்பாக விராட் கோலியுடன் சேர்ந்து விளையாடுவதற்கு அவர் மிகுந்த ஆர்வத்துடன் இருந்தார். அவர் தற்போது இந்திய கிரிக்கெட்டின் பவுலிங் துறையையே மாற்றி விட்டார்” என்று கூறினார்.

# வெய்சன்ஹாஸ் செஸ் போட்டி

## கார்ல்சன், டிங் லிரெனை வீழ்த்தினார் குகேஷ்



**வாங்கல்ஸ் : பிப். 12,**

**ஜெர்மனியின் வாங்கல்ஸ் நகரில் வெய்சன்ஹாஸ் செஸ் போட்டி நடைபெற்று வருகிறது.**

இதன் தொடக்க நாளில் இந்திய கிராண்ட்மாஸ்டரான டி.குகேஷ் உலகின் முதல் நிலை வீரரான நார்வேயின் மேக்னஸ் கார்ல்சன், அர்மேனியாவின் லெவோன் அரோனியன், நடப்பு உலக சாம்பியனான சீனாவின் டிங் லிரென் ஆகியோரை தோற்கடித்தார். அதேவேளையில் பிரான்சின் அலிரெசா ஃபிரோசாவிடம் தோல்வி அடைந்தார்.

முதல் நாள் ஆட்டத்தின் முடிவில் டி.குகேஷ் 3 புள்ளிகளுடன் 2-வது இடத்தில் உள்ளார். ஜெர்மனியின் வின்சென்ட் கீமர் 3 வெற்றி, ஒரு டிராவுடன் 3.5 புள்ளிகளுடன் முதலிடத்தில் ஆதிக்கம் செலுத்துகிறார். உஸ்பெகிஸ்தானின் நோடிர்பெக் அப்துசட்டரோவ் 2 வெற்றி, 2 டிராவுடன் 3 புள்ளிகள் பெற்று 3-வது இடத்தில் உள்ளார்.

மேக்னஸ் கார்ல்சன், அலிரெசா ஃபிரோசா, ஃபேபியானோ கருனா ஆகியோர் தலா 3 புள்ளிகளுடன் 4-வது இடத்தை பகிர்ந்து கொண்டுள்ளனர். டிங் லிரென் 4 ஆட்டங்களிலும் தோல்வி அடைந்து 8 பேர் கலந்துகொண்டுள்ள தொடரில் புள்ளிகள் ஏதும் இன்றி கடைசி இடத்தில் உள்ளார். லெவோன் அரோனியன் 3 தோல்வி, ஒரு டிராவுடன் 0.5 புள்ளிகள் பெற்று 7-வது இடத்தில் உள்ளார்.

# இந்திய கிரிக்கெட் வீரரை விமர்சித்த இர்பான் பதான்



**புதுடெல்லி : பிப். 12,**

**இங்கிலாந்துக்கு எதிரான கடைசி 3 டெஸ்ட் போட்டிகளில் விளையாடுவதற்கு அறிவிக்கப்பட்ட இந்திய அணியில் அவர் தேர்வு செய்யப்படவில்லை.**

கடந்த தென் ஆப்பிரிக்காவுக்கு எதிரான டெஸ்ட் தொடரின்போது ஒரு வருடமாக இந்திய அணியுடன் பயணித்ததால் ஏற்பட்ட பணிச்சுமையால் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்த இஷான் கிஷன் குடும்பத்தை பார்க்க அனுமதி கொடுக்குமாறு பிசிசிஐ-யிடம் கேட்டார். அதில் நியாயமும் இருந்ததால் பிசிசிஐ உடனடியாக அந்த தொடரிலிருந்து விடுப்பு கொடுத்தது.

அந்த நிலையில் இந்திய அணிக்காக மீண்டும் விளையாட தற்போது நடைபெற்று வரும் 2024 ரஞ்சிக் கோப்பையில் விளையாடி பார்முக்கு திரும்பி தயாராக இருங்கள் என்று பயிற்சியளர் ராகுல் டிராவிட் அவருக்கு அறிவுரை தெரிவித்தார். அதனால் கடந்த 9-ம் தேதி அரியானாவுக்கு எதிராக துவங்கிய போட்டியில் தன்னுடைய மாநில அணியான ஜார்கண்டுக்கு இஷான் கிஷன் விளையாடுவார் என்று எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால் அதனை செய்யாத இஷான் கிஷன், மும்பை அணியின் கேப்டன் ஹர்திக் பாண்ட்யா மற்றும் குர்ணால் பாண்ட்யா ஆகியோருடன் இணைந்து குஜராத்தில் உள்ள கிரண் மோர் அகாடமியில் பயிற்சி மேற்கொண்டு வருவது தெரிய வந்தது அதன் காரணமாக தற்போது இங்கிலாந்துக்கு எதிரான கடைசி 3 டெஸ்ட் போட்டிகளில் விளையாடுவதற்கு அறிவிக்கப்பட்ட இந்திய அணியில் இஷான் கிஷன் தேர்வு செய்யப்படவில்லை.

இந்நிலையில் பயிற்சி எடுக்க தேவையான நேரம் இருக்கும் ஒரு வீரருக்கு இந்திய அணிக்காக விளையாட வேண்டும் என்ற எண்ணத்துடன் ரஞ்சிக் கோப்பையில் விளையாடுவதற்கு நேரமில்லையா என இஷான் கிஷனை முன்னாள் வீரர் இர்பான் பதான் விமர்சித்துள்ளார்.

இது குறித்து இர்பான் பதான், தனது எக்ஸ் பக்கத்தில் இஷான் கிஷனின் பெயரை குறிப்பிடாமல் மறைமுகமாக விமர்சித்துள்ளது பின்வருமாறு;- “பயிற்சி எடுப்பதற்கு போதுமான உடல் தகுதியுடன் இருக்கும் ஒருவர் உள்ளூர் கிரிக்கெட்டில் விளையாடாதது பற்றி குழப்பம் ஏற்படுகிறது. இது எப்படி அர்த்தமுள்ளதாக இருக்கிறது” என்று பதிவிட்டுள்ளார்.

# என்னுடைய நோக்கம் மும்பை அணிக்காக ரஞ்சி கோப்பையை வெல்ல வேண்டும் : பிரித்வி ஷா



**மும்பை : பிப். 12,**

**இந்திய அணியின் தொடக்க பேட்ஸ்மேன் பிரித்வி ஷா. 24 வயதான இவர் கடந்த 2018-ம் ஆண்டு தனது 18 வயதில் இந்திய அணியில் அறிமுகம் ஆனார். அறிமுகமான வெஸ்ட் இண்டீஸ் அணிக்கெதிரான போட்டியில் சதம் விளாசினார். ஆனால் 2020-க்கும் பிறகு இந்திய அணியில் இடம் பிடிக்கவில்லை. இரண்டு ஆண்டு கால இடைவெளியில் ஐந்து போட்டிகளில் மட்டுமே இடம் பிடித்தார்.**

உள்ளூர் போட்டிகளில் விளையாடி வந்த அவருக்கு கடந்த ஆறு மாதங்களுக்கு முன் இங்கிலாந்து கவுன்ட்டி போட்டியில் விளையாடும்போது காயம் ஏற்பட்டது. ஆறு மாத ஓய்விற்குப் பிறகு தற்போது ரஞ்சி கோப்பை தொடரில் மும்பை அணிக்காக விளையாடி வருகிறார்.

இந்த நிலையில்தான் சத்தீஸ்கர் அணிக்கெதிராக 185 பந்தில் 159 ரன்கள் விளாசி அசத்தியுள்ளார். இந்த போட்டியில் மதிய உணவு இடைவேளைக்கு முன்னதாகவே சதத்தை பூர்த்தி செய்தார். இதற்கு முன்னதாக ஒருமுறையும் உணவு இடைவேளைக்கு முன்னதாகவே சதம் அடித்துள்ளார். இதன்மூலம் இரண்டு முறை மதிய உணவு இடைவேளைக்கு முன் சதம் அடித்துள்ளார்.

காயத்தில் இருந்து மீண்டு வந்த நிலையில் சதம் அடித்ததன் மூலம் மீண்டும் இந்திய அணியில் இடம் கிடைக்க வாய்ப்புள்தாக கருதப்படுகிறது. இதுகுறித்து பிரித்வி ஷா கூறுகையில் “நான் அதிகப்படியாக எதையும் குறித்து யோசித்து கொண்டிருக்கவில்லை. தற்போதைய நிலையில் இருக்க விரும்புகிறேன். எதிர்பார்ப்பு ஏதும் இல்லை. காயத்தில் இருந்து மீண்டு வந்து கிரிக்கெட் விளையாடுவதே எனக்கு மகிழ்ச்சி அளிக்கிறது.

காயத்தில் இருந்து மீண்டு வந்துள்ள நான், எனது சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்த விரும்புகிறேன். என்னுடைய நோக்கம் மும்பை அணிக்காக ரஞ்சி கோப்பையை வெல்ல வேண்டும் என்பதுதான். என்னுடைய பங்களிப்பு மூலம் இந்த சாதனையை அடைய முயற்சி செய்வேன்” எனத் தெரிவித்துள்ளார்.

இதற்கு முன்னதாக பிரித்வி ஷா முதல்தர போட்டியில் 383 பந்தில் 379 ரன்கள் அடித்துள்ளார். அப்போதும் மதிய உணவு இடைவேளைக்கு முன்னதாக சதம் அடித்தார். இதன்மூலம் முதல்தர போட்டியில் இரண்டு முறை மதிய உணவு இடைவேளைக்கு முன்னதாக சதம் அடித்த ஒரே வீரர் என்ற பெருமையை பெற்றுள்ளார்.

# ஹாக்கியில் ஸ்பெயினை வீழ்த்தியது இந்தியா



**புவனேஷ்வர் : பிப். 12,**

**சர்வதேச ஹாக்கி சம்மேளத்தின் புரோ ஹாக்கி லீக் தொடரில் நேற்று முன்தினம் சனிக்கிழமை புவனேஷ்வரில் நடைபெற்ற லீக் ஆட்டத்தில் இந்தியா - ஸ்பெயின் அணிகள் மோதின. 7-வது நிமிடத்தில் இந்திய அணியின் கேப்டன் ஹர்மன்பிரீத் சிங் பெனால்டி கார்னரை கோலாக மாற்றினார்.**

தொடர்ந்து 20-வது நிமிடத்தில் கிடைத்த பெனால்டி ஸ்டிரோக்கை ஹர்மன்பிரீத் சிங் கோலாக மாற்றி அசத்த இந்திய அணி 2-0 என முன்னிலை பெற்றது. 24-வது நிமிடத்தில் கிடைத்த பெனால்டி கார்னர் வாய்ப்பை ஜுக்ராஜ் சிங் கோலாக மாற்ற முதல் பாதி ஆட்டத்தில் இந்திய அணி 3-0 என வலுவான முன்னிலையில் இருந்தது.

34-வது நிமிடத்தில் ஸ்பெயின் முதல் கோலை அடித்தது. அந்த அணிக்கு கிடைத்த பெனால்டி ஸ்டிரோக்கில் கேப்டன் மிரல்ஸ் மார்க் கோல் அடித்தார்.

50-வது நிமிடத்தில் இந்திய அணியின் லலித் குமார் உபாத்யாயா பீல்டு கோல் அடித்து அசத்தினார். முடிவில் இந்திய அணி 4-1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

வரலாறு சினிமா

# சூர்யா, ராம் சரண் மற்றும் ஜூனியர் என்டிஆர் தெற்கே கால் பதிக்கும் ஜான்வி கபூர்



**மும்பை : பிப். 12,**

**ஸ்ரீதேவி மகள் ஜான்வி கபூர் தெற்கில் எப்போது நடிப்பார் என்ற தென்னக ரசிகர்களின் நீண்ட கால எதிர்பார்ப்பை, தனது அடுத்தடுத்த படங்களின் வழியாக தற்போது அவர் தீர்த்து வருகிறார்.**

தெற்கிலிருந்து வடக்கே சென்று பாலிவுட்டில் தடம் பதித்தவர் நடிகை ஸ்ரீதேவி. தயாரிப்பாளர் போனி கபூரை மணந்த ஸ்ரீதேவி, அங்கேயே செட்டிலாகிப் போனார். அவரது அகால மரணத்தை அடுத்து, ஸ்ரீதேவியின் ரசிகர்களுக்கு அவரது மூத்த மகள் ஜான்வி கபூர் தனது தொடர் திரைப் பிரவேசத்தால் ஆறுதல் தந்து வருகிறார்.

ஆனபோதும், ஸ்ரீதேவியை ஆளாக்கிய தெற்கு படவுலகம் மயிலு ஸ்ரீதேவி மகள் ஜான்விக்காக காத்திருந்தது. முக்கியமாக, போனி கபூர் தயாரிப்பிலான தென்னிந்திய திரைப்படங்கள் வெளியாகும் போதெல்லாம், அதில் ஜான்வி நடிக்கிறாரா என போனியை கேள்விகளால் துளைத்தெடுத்தனர்.

குறிப்பாக அஜித் குமாரின் அடுத்தடுத்த படங்களை போனி கபூர் தயாரித்தபோது, தல ஜோடியாக ஜான்வி வேண்டும் என்பது அவரது ரசிகர்களின் கோரிக்கையாக இருந்தது. இதனிடையே தனது முதல் தென்னிந்திய பிரவேசத்தை அறிவித்த ஜான்வி கபூர், இந்த ஆண்டில் மேலும் இரு தென்னிந்திய நட்சத்திரங்களுடன் ஜோடி கட்டும் தகவலும் வெளியாகி இருக்கிறது.

ஜூனியர் என்டிஆர் ஜோடியாக அவரது 30வது திரைப்படத்தில் ஜான்வி கபூர் ஜோடி கட்டுகிறார். கொரட்டல சிவா இயக்கத்திலான இந்த திரைப்படத்தில் ஜான்வி கபூரின் பிரவேசம் அதிகாரபூர்வமாக உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதற்கு அடுத்தபடியாக ராம் சரண் ஜோடியாக அவரது 16வது திரைப்படத்தில் ஜான்வி ஜோடி சேர்கிறார். புச்சி பாபு இதனை இயக்குகிறார். இந்த 2 திரைப்படங்களும் தெலுங்குக்கு அப்பால், பான் இந்தியா திரைப்படமாக உருவாகின்றன.

மூன்றாவதாக தமிழின் சூர்யா சிவக்குமாருடன் ஜான்வி கபூர் இணைகிறார். ’கர்ணா’ என்ற திரைப்படம் இந்தியில் பான் இந்தியா படைப்பாக உருவாகிறது. மகாபாரதக் கதையை தழுவி உருவாகும் இந்தப் படத்தில் திரவுபதி வேடத்தில் ஜான்வி நடிக்கிறார்.

# லவ் இன்சூரன்ஸ் கம்பெனி : முதல் நாள் அனுபவத்தை பகிர்ந்த எஸ்.ஜே. சூர்யா



**சென்னை : பிப். 12,**

**விக்னேஷ் சிவன் இயக்கும் புதிய படத்திற்கு லவ் இன்சூரன்ஸ் கம்பெனி என பெயரிடப்பட்டு இருக்கிறது. இந்த படத்தில் பிரதீப் ரங்கநாதன் கதாநாயகனாக நடிக்கிறார். இவருக்கு ஜோடியாக கீர்த்தி ஷெட்டி நடிக்கிறார். மேலும் எஸ்.ஜே. சூர்யா முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்கிறார்.**

செவன் ஸ்கிரீன் ஸ்டுடியோஸ் தயாரிக்கும் இந்த படத்திற்கு அனிருத் இசையமைக்கிறார். இந்த படத்தின் படப்பிடிப்பு கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் துவங்கி நடைபெற்று வருகிறது. அந்த வகையில், இந்த படத்தில் தனது முதல் நாள் படப்பிடிப்பு அனுபவம் குறித்து எஸ்.ஜே. சூர்யா தனது அதிகாரப்பூர்வ எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளார்.

அதில், “இந்த அன்புக்கு மிக்க நன்றிகள் விக்னேஷ் சிவன் சார், லவ் இன்சூரன்ஸ் கம்பனி படத்தில் எனது முதல் நாள் படப்பிடிப்பை வெகுவாக ரசித்தேன். எனது பெர்ஃபார்மன்சில் நீங்கள் எதிர்பார்த்தவைகளை நான் மிகவும் விரும்பினேன். தொடர்ச்சியாக படப்பிடிப்பில் கலந்துகொள்வதில் ஆவலாக எதிர்நோக்குகிறேன். காட்சிக்கு நீங்களும் ஒளிப்பதிவாளர் ரவி வர்மன் கொடுத்திருக்கும் தோற்றம் வாவ் சொல்ல வைக்கிறது,” என குறிப்பிட்டுள்ளார்.

# தேர்தலில் போட்டியிட விருப்பம் தெரிவித்த நிலையில் பிரதமராகும் திட்டம் ஏதேனும் உள்ளதா? : நடிகை கங்கனா பேட்டி



**மும்பை : பிப். 12,**

**தேர்தலில் போட்டியிட விருப்பம் தெரிவித்த கங்கனாவிடம், பிரதமராகும் திட்டம் ஏதேனும் உள்ளதா? என்று கேட்டதற்கு பளிச் என்று பதிலளித்துள்ளார். பாலிவுட் நடிகை கங்கனா அரசியலில் குதிப்பார் என்று கடந்த சில ஆண்டுகளாகவே வதந்திகள் இருந்து வருகிறது. இந்நிலையில் அவர் டிரெய்லர் வெளியீட்டு விழாவில் கலந்து கொண்டார்.**

அப்போது நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். நிருபர் ஒருவர், ‘உங்களுக்கு எதிர்காலத்தில் பிரதமராகும் திட்டம் ஏதும் உள்ளதா? என்று கேட்டார். அதற்கு பதிலளித்த அவர், ‘எமர்ஜென்சி (அவசரநிலை’ என்ற படத்தில் நடிக்கிறேன். அந்தப் படத்தைப் பார்த்த பிறகு, யாரும் என்னைப் பிரதமராகப் பார்க்க விரும்ப மாட்டார்கள் என்று நினைக்கிறேன்’ என்றார்.

இந்திய அரசியலில் முன்னாள் பிரதமர் இந்திரா காந்தி அவசரநிலையை கொண்டு வந்ததை, எதிர்மறையாக சித்தரிக்கும் வகையில், அந்த திரைப்படம் எடுக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. முன்னதாக தன்னை பாஜகவின் ஆதரவாளராக காட்டிக் கொள்ளும் கங்கனா, கடந்த நவம்பரில் அயோத்திக்கு சென்ற போது அளித்த பேட்டியில், ‘கிருஷ்ணரின் ஆசீர்வாதம் இருந்தால், மக்களவை தேர்தலில் போட்டியிடுவேன்’ என்று கூறியிருந்தார். அதனால் வரும் மக்களவை தேர்தலில் பாஜக சார்பில் கங்கனா போட்டியிட உள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

# கிஷன் தாஸ் நடிக்கும் ‘தருணம்’ படத்தின் புதிய பாடல் வெளியானது



**சென்னை : பிப். 12,**

**இந்த படத்தில் கிஷன் தாசுக்கு ஜோடியாக ஸ்மிருதி வெங்கட் நடித்துள்ளார்.**

‘தேஜாவு’ படத்தின் இயக்குனர் அரவிந்த் ஸ்ரீநிவாசன் இயக்கத்தில் உருவாகியுள்ள திரைப்படம் ‘தருணம்’. கிஷன் தாஸ் கதாநாயகனாக நடித்துள்ள இந்த படத்தில் அவருக்கு ஜோடியாக ஸ்மிருதி வெங்கட் நடித்துள்ளார். ஜென் ஸ்டுடியோஸ் சார்பில் தயாரிப்பாளர் புகழ் தயாரிக்கும் இந்த படத்துக்கு தர்புகா சிவா இசையமைத்துள்ளார். இந்த படத்திற்கு ராஜா பட்டாசார்ஜி ஒளிப்பதிவு செய்துள்ளார். அருள் இ சித்தார்த் படத்தொகுப்பு மேற்கொள்கிறார்.

இந்த நிலையில் இந்த படத்தின் புதிய பாடலை படக்குழு வெளியிட்டுள்ளது. அதன்படி ‘எனை நீங்காதே நீ’ என்ற பாடலின் லிரிக் வீடியோ வெளியாகி உள்ளது. பாடலாசிரியர் மதன் கார்க்கி எழுதியுள்ள இந்த பாடலை கபில் கபிலன், பவித்ரா சாரி பாடியுள்ளனர். இந்த பாடல் தற்போது இணையத்தில் வைரலாகி வருகிறது.

வரலாறு உலகம்

# ஐ.நா. தலைமையகம் அடியில் ஹமாஸ் சுரங்கம் அமைப்பு : வீடியோ வெளியிட்ட இஸ்ரேல்



**காசா : பிப். 12,**

**பாலஸ்தீன அகதிகளுக்கான ஐ.நா. பணியாளர்கள்சிலர் ஹமாஸ் அமைப்புக்காக உளவு வேலை செய்துள்ளனர் என இஸ்ரேல் கடந்த மாதம் அதிரடியான குற்றச்சாட்டுகளை தெரிவித்தது.**

ஹமாஸ் பயங்கரவாத அமைப்புக்கு எதிரான போரானது நான்கு மாதங்களுக்கும் மேலாக தொடர்ந்து வரும் சூழலில், காசாவில் உள்ள பாலஸ்தீன அகதிகளுக்கான ஐ.நா. நிவாரண மற்றும் பணிகள் கழகத்தின் தலைமையகம் அமைந்த பகுதியில், அதன் அடியில் சுரங்கம் ஒன்றை கண்டறிந்து உள்ளோம் என இஸ்ரேல் ராணுவம் தெரிவித்துள்ளது.

இதனால், பாலஸ்தீனர்களுக்கான முக்கிய நிவாரண அமைப்பை, ஹமாஸ் அமைப்பினர் தவறாக பயன்படுத்தியதற்கான புதிய சான்று கிடைத்துள்ளது என்று இஸ்ரேல் குற்றச்சாட்டு தெரிவித்து உள்ளது. பாலஸ்தீன அகதிகளுக்கான ஐ.நா. நிவாரண மற்றும் பணிகள் கழகத்தின் பணியாளர்கள் சிலர் ஹமாஸ் அமைப்புக்காக உளவு வேலை செய்துள்ளனர் என இஸ்ரேல் கடந்த மாதம் அதிரடியான குற்றச்சாட்டுகளை தெரிவித்தது. இது பல நாடுகளை அதிர்ச்சி அடைய செய்தது.

இதனை தொடர்ந்து, ஐ.நா.வுக்கு வழங்கி வந்த நன்கொடையை சில நாடுகள் அடுத்தடுத்து முடக்கி வைத்தன. இதுபற்றி பணியாளர்களிடம் உள்மட்ட விசாரணை நடத்தப்படும் என்று ஐ.நா.வும் அறிவித்தது. இந்த சூழலில், அதன் தலைமையகம் அமைந்த பகுதியில், அதன் அடியில் ஹமாஸ் அமைப்பின் சுரங்கம் இருப்பது கண்டறியப்பட்டது மற்றொரு அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளதுடன், நாடுகளிடம் நிதியுதவி பெறுவதில் நெருக்கடியான சூழலில், மற்றொரு சிக்கலையும் ஐ.நா. எதிர்கொண்டு உள்ளது.

அந்த சுரங்கம் ஒரு நபர் நடந்து செல்லக்கூடிய அளவுக்கு உயரத்துடன் உள்ளது. அதுபற்றிய வீடியோ ஒன்றையும் இஸ்ரேல் வெளியிட்டு உள்ளது. உள்ளே, மின் இணைப்புகளும் கொடுக்கப்பட்டு உள்ளன. ஐ.நா.வின் பள்ளிக்கூடம் அருகே அமைந்த இந்த சுரங்கத்திற்குள் பெரிய மின்கலன்களும் வைக்கப்பட்டு உள்ளன. அதில், மின்சாரத்திற்காக தனி அறை அமைத்து, அதன் வழியே தேவையான இடங்களுக்கு மின்சாரம் கொண்டு செல்லப்படுவதும் தெரிந்தது. பயங்கரவாதிகள் இந்த கட்டமைப்பை பயன்படுத்தி வந்துள்ளனர். சுரங்க வாசல் மற்றொரு புறத்தில், ஐ.நா.வின் வளாக பகுதிக்குள்ளேயே முடிகிறது.

அதனை சுற்றி பெரிய, பெரிய கட்டிடங்களும் அமைந்துள்ளன. ஐ.நா. தலைமையகத்தின் செர்வர் அறையில் உள்ள கட்டமைப்பில் இருந்து, சுரங்கத்திற்குள் மின் இணைப்பு கொடுக்கப்பட்டு இருப்பதும் தெரிய வந்து அதிர்ச்சி ஏற்படுத்தி உள்ளது. இதனால், ஹமாஸ் அமைப்புக்கு ஆதரவாக ஐ.நா. பணியாளர்கள் செயல்படுகின்றனர் என்று இஸ்ரேல் கூறிய குற்றச்சாட்டுக்கு வலு சேர்க்கும் வகையில் இந்த வீடியோ அமைந்துள்ளது.

# காசாவில் இஸ்ரேல் வான்வழி தாக்குதலில் பாலஸ்தீனர்கள் 31 பேர் பலி



**காசா : பிப். 12,**

**பாலஸ்தீன பகுதியை விட்டு செல்ல முடியாமல், முகாம்களிலும், ஐ.நா. நடத்த கூடிய காப்பகங்களிலும் அவர்கள் தங்கி உள்ளனர்.**

இஸ்ரேல் மீது ஹமாஸ் பயங்கரவாத அமைப்பு கடந்த ஆண்டு அக்டோபர் 7-ந்தேதி திடீரென தாக்குதல் நடத்தியது. இந்த தாக்குதலில், இஸ்ரேலை சேர்ந்த மக்கள் 1,200 பேர் உயிரிழந்தனர். 250 பேர் பணய கைதிகளாக சிறை பிடிக்கப்பட்டனர். அவர்களில் சிலர் விடுவிக்கப்பட்டபோதிலும், 130-க்கும் மேற்பட்டோர் ஹமாஸ் அமைப்பின் பிடியில் உள்ளனர். ஆனால், அவர்களில் 30 பேர் மரணம் அடைந்திருக்க கூடும் என நம்பப்படுகிறது.

இதற்கு இஸ்ரேலும் பதிலடி கொடுத்தது. அவர்களை அடியோடு ஒழிக்கும் வரை ஓயமாட்டோம் என இஸ்ரேல் அரசும் அறிவித்தது. தொடர்ந்து தாக்குதலை மற்றும் பயங்கரவாதிகளை தேடும் பணியை தீவிரப்படுத்த இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகு உத்தரவிட்டு உள்ளார்.

ஹமாஸ் பயங்கரவாத அமைப்புக்கு எதிரான போரானது நான்கு மாதங்களுக்கும் மேலாக தொடர்ந்து வருகிறது. காசாவில் உள்ள 23 லட்சம் பேரில் பாதிக்கும் மேற்பட்டோர் இஸ்ரேல் ராணுவ ஆக்கிரமிப்பால் எகிப்து எல்லையையொட்டிய பகுதிக்கு புலம்பெயர்ந்து சென்றனர்.

இந்நிலையில், ரபா நகரில் இஸ்ரேல் நடத்திய வான்வழி தாக்குதலில் பாலஸ்தீனர்கள் 31 பேர் பலியாகி உள்ளனர். அவர்களில், 3-ல் ஒரு பங்கு மக்கள் குழந்தைகள் ஆவர். பாலஸ்தீன பகுதியை விட்டு செல்ல முடியாமல், முகாம்களிலும், ஐ.நா. நடத்த கூடிய காப்பகங்களிலும் அவர்கள் தங்கி உள்ளனர். இதனால், அவை நிரம்பி வழிகின்றன. போரால் பாலஸ்தீனர்கள் 27 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் உயிரிழந்து உள்ளனர். இதனை காசா சுகாதார துறை தெரிவித்து உள்ளது.

# "என்னுடன் நேருக்கு நேராக விவாதத்திற்கு வாருங்கள்"

## டிரம்பிற்கு சவால் விடும் நிக்கி ஹாலே




**தென் கரோலினா : பிப். 12,**

**2024 வருட இறுதியில் அமெரிக்காவில் அதிபர் தேர்தல் நடைபெறவுள்ளது.**

ஜனநாயக கட்சியின் சார்பில் தற்போதைய அதிபர் ஜோ பைடனும், குடியரசு கட்சியின் சார்பில் முன்னாள் அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்பும் தீவிரமாக களமிறங்கி உள்ளனர். குடியரசு கட்சியிலேயே டிரம்பிற்கு மாற்றாக தென் கரோலினா மாநில முன்னாள் கவர்னராகவும், ஐ.நா. சபையின் முன்னாள் அமெரிக்க தூதராகவும் பணிபுரிந்த நிக்கி ஹாலே ஆதரவு கோரி பிரசாரம் செய்து வருகிறார்.

தற்போதைய நிலவரப்படி குடியரசு கட்சியில் டிரம்ப் முன்னிலை வகித்தாலும், நிக்கி போட்டியிலிருந்து பின்வாங்கவில்லை. தென் கரோலினாவில் இருவரும் தங்கள் பிரசாரத்தில் ஒருவரையொருவர் விமர்சித்து வந்தனர். இந்நிலையில், தனது பிரசாரத்தில் டொனால்ட் டிரம்ப், நிக்கி ஹாலேவை விமர்சிக்கும் வகையில், "அவரது கணவருக்கு என்ன ஆனது? எங்கிருக்கிறார்? அவர் ஏன் நிக்கிக்கு ஆதரவாக பிரசாரத்திற்கு வரவில்லை?" என கேள்வி எழுப்பியிருந்தார்.

இந்த விமர்சனத்திற்கு பதிலடி கொடுத்து நிக்கி தெரிவித்திருப்பதாவது: தென் கரோலினா பிரசாரத்தில் டிரம்ப் எனது கணவரின் ராணுவ சேவையை கேலி செய்தார். என் கணவருக்காக நான் பெருமைப்படுகிறேன். ராணுவத்தில் பணியாற்றும் ஒவ்வொருவரின் குடும்பத்தினருக்கும் அந்த தியாகம் புரியும்.

டொனால்ட் டிரம்ப் அவர்களே, மைக்கேல் (என் கணவர்) நாட்டிற்கு சேவை செய்யும் பணியில் ஈடுபட்டுள்ளார். அப்படி என்றால் என்னவென்று உங்களுக்கு தெரியாது. உங்களுக்கு என்னை பற்றி ஏதாவது கருத்து கூற வேண்டுமென்றால் என்னுடன் நேருக்கு நேராக விவாதத்திற்கு வாருங்கள். அங்கு என் முகத்திற்கு நேராக கேள்விகளை கேளுங்கள்.

போர்க்களத்தில் நாட்டிற்காக போராடுபவரை நீங்கள் கேலி செய்வீர்கள் என்றால் நீங்கள் அமெரிக்க அதிபர் பதவிக்கு மட்டும் அல்ல - அமெரிக்க ஓட்டுனர் உரிமம் பெற கூட தகுதியற்றவர் என்று நிக்கி கூறினார்.

# பாகிஸ்தான் தேர்தலில் இழுபறி

## கூட்டணி ஆட்சி அமைக்க நவாஸ் ஷெரீப் முயற்சி – ராணுவம் ஆதரவு



**இஸ்லாமாபாத் : பிப். 12,**

**பாகிஸ்தான் நாடாளுமன்ற தேர்தலில் எந்த கட்சிக்கும் அறுதி பெரும்பான்மை கிடைக்கவில்லை. இதையடுத்து, கூட்டணி ஆட்சி அமைக்க முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீப் முயற்சி மேற்கொண்டுள்ளார். இதற்கு பாகிஸ்தான் ராணுவம் ஆதரவு தெரிவித்துள்ளது.**

பாகிஸ்தானில் கடந்த 8-ம் தேதி, நாடாளுமன்றம் மற்றும் மாகாண சட்டப்பேரவைகளுக்கு தேர்தல் நடந்தது. பதிவான வாக்குகளை எண்ணும் பணி வெள்ளிக்கிழமை தொடங்கியது. நேற்று முன்தினம் சனிக்கிழமை காலை நிலவரப்படி, 265-ல் 250 தொகுதிகளின் வாக்கு எண்ணிக்கை முடிவடைந்திருந்தது. முன்னாள் பிரதமர் இம்ரான் கானின் பாகிஸ்தான் தெக்ரீக்-இ-இன்சாஃப் கட்சி (பிடிஐ) தேர்தலில் போட்டியிட தடைவிதிக்கப்பட்டதால், அதன் தலைவர்கள் சுயேட்சை வேட்பாளர்களாக போட்டியிட்டனர்.

பிடிஐ ஆதரவு பெற்ற சுயேட்சை வேட்பாளர்கள் 99 இடங்களில் வெற்றி பெற்றனர். முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீப்பின் பாகிஸ்தான் முஸ்லிம் லீக்-என் கட்சி (பிஎம்எல்-என்) 71 இடங்களிலும், பிலாவல் புட்டோ தலைமையிலான பாகிஸ்தான் மக்கள் கட்சி (பிபிபி) 53 இடங்களிலும் வெற்றி பெற்றிருந்தது. முத்தாஹிடா குவாமி இயக்கம் (எம்க்யூஎம்) கட்சி 17 இடங்களிலும் மற்ற இடங்களில் சிறு கட்சிகளும் வென்றன.

பாகிஸ்தான் நாடாளுமன்ற தேர்தலில் எந்த கட்சிக்கும் அறுதி பெரும்பான்மை இல்லாததால், அரசியல் கட்சிகள் கூட்டணி ஆட்சிக்கு முன்வர வேண்டும் என நவாஸ் ஷெரீப் அழைப்பு விடுத்துள்ளார். இதுகுறித்து பிலாவல் புட்டோவின் பாகிஸ்தான் மக்கள் கட்சியினருடன், நவாஸ் கட்சியினர் பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றனர். நவாஸ் ஷெரீப்பின் இந்த முயற்சிக்கு பாகிஸ்தான் ராணுவத்தின் தலைமை தளபதி ஜெனரல் ஆஸிம் முனிர் ஆதரவு தெரிவித்துள்ளார். ஜனநாயக சக்திகள் அனைத்தும் ஒன்றிணைத்து ஆட்சி அமைக்க வேண்டும் என அவர் வலியுறுத்தியுள்ளார்.

பாகிஸ்தானில் ராணுவ மையங்கள் மீது கடந்தாண்டு மே 9-ம் தேதி நடந்த தாக்குதல் தொடர்பாக இம்ரான் கான் மீது 12 வழக்குகள் தொடரப்பட்டிருந்தன. இந்த வழக்குகளில் அனைத்து குற்றவாளிகளுக்கும் ஜாமீன் வழங்கி தீவிரவாத தடுப்பு நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது. ஆனால் இம்ரான்கான் மீது ஏராளமான வழக்குகள் நிலுவையில் உள்ளதால், அவர் தொடர்ந்து சிறையில் இருப்பார்.

# எங்கள் கட்சியை ஆட்சியமைக்க ஜனாதிபதி அழைப்பு விடுப்பார் – பி.டி.ஐ. தலைவர் கோஹர் கான்



**இஸ்லாமாபாத் : பிப். 12,**

**இம்ரான்கானின் பி.டி.ஐ. கட்சியை ஆட்சியமைக்க ஜனாதிபதி ஆரிப் ஆல்வி அழைப்பு விடுப்பார் என்று கோஹர் கான் தெரிவித்துள்ளார்.**

பாகிஸ்தானில் கடந்த 8-ந் தேதி நாடாளுமன்ற தேர்தல் நடந்து முடிந்தது. 255 இடங்களுக்கு முடிவுகள் அறிவிக்கப்பட்ட நிலையில் முன்னாள் பிரதமர் இம்ரான்கானின் பாகிஸ்தான்-தெஹ்ரீப்-இ-இன்சாப் (பிடிஐ) கட்சியின் ஆதரவு பெற்ற சுயேச்சை வேட்பாளர்கள் 101 இடங்களை பெற்று முதலிடத்தில் உள்ளனர்.

ஆட்சி அமைப்பதற்கு 133 இடங்கள் தேவை என்கிற நிலையில் தற்போதைய சூழலில் எந்த கட்சியும் அதற்கான பெரும்பான்மையை பெறவில்லை. இதனால் அடுத்த ஆட்சியை அமைக்கப்போவது யார் என்பதில் தொடர்ந்து இழுபறி நீடித்து வருகிறது. அதே சமயம் சிறையில் அடைக்கப்பட்டுள்ள முன்னாள் பிரதமர் இம்ரான்கான், தேர்தலில் வெற்றி பெற்றதாக கூறி, வெற்றியை கொண்டாட தனது ஆதரவாளர்களுக்கு அழைப்பு விடுத்தார்.

இந்நிலையில் தேசிய சட்டமன்றத்தில் பெரும்பான்மையைப் பெற்றுள்ளதால், பி.டி.ஐ. கட்சியை ஆட்சியமைக்க ஜனாதிபதி ஆரிப் ஆல்வி அழைப்பார் என இம்ரான் கானின் பாகிஸ்தான் தெஹ்ரீக்-இ-இன்சாப் தலைவர் பாரிஸ்டர் கோஹர் அலி கான் தெரிவித்துள்ளார்.

மேலும் தேசிய சட்டமன்றத்தில் 170 இடங்களில் பி.டி.ஐ. வெற்றி பெற்றது. இருப்பினும், அதிகாரப்பூர்வ முடிவுகளின்படி, கட்சி 100 இடங்களைப் பெற்றுள்ளது. எங்களுக்கு யாருடனும் சண்டை இல்லை, நாங்கள் முன்னேற விரும்புகிறோம். அரசியலமைப்பு மற்றும் சட்டத்தின்படி நாங்கள் ஆட்சி அமைப்போம். பி.டி.ஐ.க்கு எந்த தடையையும் உருவாக்கக்கூடாது, விரைவில் முடிவுகள் அறிவிக்கப்பட வேண்டும்" என்றும் கோஹர் கான் கூறினார்.

# பாகிஸ்தானில் 50–க்கும் மேற்பட்ட வாக்குச்சாவடிகளில் மறுவாக்குப்பதிவு



**பாகிஸ்தான் : பிப். 12,**

**பாகிஸ்தான் பாராளுமன்ற தேர்தல் கடந்த 8-ந்தேதி நடந்தது. அதைத்தொடர்ந்து வாக்கு எண்ணிக்கை உடனே தொடங்கினாலும் அனைத்து தொகுதிகளுக்கான முடிவுகள் இன்னும் அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்படவில்லை.**

இதற்கிடையே வாக்குப்பதிவின் போது பல இடங்களில் வாக்குச்சீட்டு, வாக்குப்பெட்டிகள் சேதப்படுத்தப்பட்டன. இவ்வாறு சேதம் அடைந்த வாக்குசாவடிகள் குறித்து தகவல் சேகரித்து வருகிறது தேர்தல் ஆணையம். மேலும், தகவல் தெரிவிக்கவும் வலியுறுத்தியுள்ளது.

அதன்படி சுமார் 50-க்கும் மேற்பட்ட வாக்குச்சாவடிகளில் மறுவாக்குப்பதிவு நடத்தப்பட வேண்டும் என கோரிக்கை வந்ததாக தெரிகிறது. அதனடிப்படையில் வருகிற 15-ந் தேதி மறு வாக்குப்பதிவு நடைபெறும் என தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

# ஆஸ்திரேலியாவில் இலங்கை அதிபருடன் இந்திய வெளியுறவுத்துறை மந்திரி ஜெய்சங்கர் சந்திப்பு



**சிட்னி : பிப். 12,**

**பெர்த் நகரத்தில் இலங்கை அதிபர் ரணில் விக்ரமசிங்கேவும், மத்திய மந்திரி ஜெய்சங்கரும் சந்தித்துக் கொண்டனர்.**

ஆஸ்திரேலியாவில் 2 நாட்கள் நடைபெறும் இந்தியப் பெருங்கடல் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக இந்திய வெளியுறவுத்துறை மந்திரி ஆஸ்திரேலியாவிற்குச் சென்றுள்ளார். இந்நிலையில் அந்நாட்டின் பெர்த் நகரத்தில் இலங்கை அதிபர் ரணில் விக்ரமசிங்கேவும், மத்திய மந்திரி ஜெய்சங்கரும் சந்தித்துக் கொண்டனர்.

இந்த சந்திப்பின் போது இரு நாடுகளுக்கும் இடையில் தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் இருதரப்பு திட்டங்களின் முன்னேற்றம் குறித்து கவனம் செலுத்துவது தொடர்பாக இருவரும் விவாதித்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# காப்பாற்றுங்கள் என்று உதவி கேட்ட காசா சிறுமி உள்பட குடும்பமே பலியான சோகம்



**காசா : பிப். 12,**

**வாகனத்தில் சிக்கியிருந்த சிறுமி ரஜப்பை, செஞ்சிலுவை சங்க மீட்பு குழுவினர் 2 பேர் நெருங்கியிருந்த சூழலில், மற்றொரு தாக்குதலில் அவர்கள் உயிரிழந்தனர்.**

இஸ்ரேல் மீது ஹமாஸ் பயங்கரவாத அமைப்பு கடந்த ஆண்டு அக்டோபர் 7-ந்தேதி நடத்திய கோர தாக்குதல் எதிரொலியாக, அவர்களை அடியோடு ஒழிக்கும் வரை ஓயமாட்டோம் என அந்நாட்டு அரசு அறிவித்தது. தொடர்ந்து தாக்குதலை மற்றும் பயங்கரவாதிகளை தேடும் பணியை தீவிரப்படுத்த இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகு உத்தரவிட்டு உள்ளார்.

ஹமாஸ் பயங்கரவாத அமைப்புக்கு எதிரான போரானது நான்கு மாதங்களுக்கும் மேலாக தொடர்ந்து வருகிறது. இந்த சூழலில், போரால் சீரழிந்த காசாவில், ஹிந்த் ரஜாப் (வயது 6) என்ற சிறுமி குடும்பத்தினருடன் காரில் சென்றுள்ளார். அப்போது, தாக்குதல் நடத்தப்பட்டு வந்தது. இதனால், தாக்குதலில் சிக்கி சிறுமியின் குடும்பத்தினர் உயிரிழந்து உள்ளனர். அவர்களின் உடல்கள் அருகே தனித்து விடப்பட்ட நிலையில், சிறுமி ரஜப் பயத்துடனும், காயத்துடனும் இருந்திருக்கிறார்.

அந்த சிறுமி பாலஸ்தீன செஞ்சிலுவை சங்கத்திற்கு மொபைல் போன் வழியே தொடர்பு கொண்டு, நான் பயந்து போயிருக்கிறேன். எவரேனும் சிலரை அழைத்து, என்னை வந்து காப்பாற்றும்படி கூறுங்கள் என்று கேட்டு கொண்டிருக்கிறார். அவருடன் சென்ற 6 உறவினர்கள் உயிரிழந்தனர் என நம்பப்படுகிறது. இந்நிலையில், வாகனத்தில் சிக்கியிருந்த சிறுமி ரஜப்பை, செஞ்சிலுவை சங்க மீட்பு குழுவினர் 2 பேர் நெருங்கியிருந்த சூழலில், மற்றொரு தாக்குதலில் அவர்களும் உயிரிழந்தனர். இந்த துயர தகவலை அந்த செஞ்சிலுவைசங்கம் அறிக்கை ஒன்றில் தெரிவித்து உள்ளது. இஸ்ரேல் படைகள், அந்த ஆம்புலன்ஸ் மீது தாக்குதல் நடத்தியது.

அதனுள் மீட்பு குழுக்களை சேர்ந்த 2 பேர் இருந்தனர். இஸ்ரேல் ராணுவம் மற்றும் செஞ்சிலுவை சங்கத்திற்கு இடையே ஒருங்கிணைந்து செயல்படுவதற்காக முன்பே பேசியிருந்தபோதும், இந்த தாக்குதல் நடத்தப்பட்டு உள்ளது என்றும் தெரிவித்துள்ளது. சிறுமி ரஜப், மீட்பு குழுவினர் யூசுப் ஜீனோ மற்றும் அகமது அல்-மதவுன் ஆகிய 2 பேர் என 3 பேரின் வாழ்வும் சோகத்தில் முடிந்து போனது வருத்தம் அளிக்கிறது என பாலஸ்தீன செஞ்சிலுவை சங்கம் எக்ஸ் சமூக ஊடக பதிவில் தெரிவித்து இருக்கிறது.

அந்த சிறுமியை காப்பாற்ற நாங்கள் செல்கிறோம் என எங்கள் குழுவினரான, ஹீரோக்கள் கூறிசென்றபோது, அவர்கள் அனைவரும் மரணம் அடைந்தது நாங்கள் ஒருபோதும் எதிர்பார்க்காதது என்றும் தெரிவித்து உள்ளது. அதுபற்றிய வீடியோ ஒன்றும் வெளியானது. அதில், ஆம்புலன்ஸ் முழுவதும், குண்டுவீச்சு தாக்குதலில் எரிந்து போயிருந்தது. சிறுமி எப்படி இறந்து போனாள் என்ற விவரம் தெரிய வரவில்லை.

# பாலியல் குற்றவாளிக்கு மன்னிப்பு வழங்கிய ஹங்கேரி பெண் அதிபர் ராஜினாமா




**ஹங்கேரி : பிப். 12,**

**ஹங்கேரி நாட்டுப் பெண் அதிபராக இருந்தவர் கடாலின் நோவக். இவர் பாலியல் குற்றச்சாட்டில் சிக்கிய நபருக்கு மன்னிப்பு வழங்கினார்.**

அரசு நடத்தும் குழந்தைகள் இல்ல நிர்வாகி மீது பாலியல் துஷ்பிரயோக வழக்கு தொடரப்பட்டு அவர் சிறையில் அடைக்கப்பட்டார். அந்த நிர்வாகிக்கு அதிபர் கடாலின் நோவக் மன்னிப்பு வழங்கி இருந்தார். இதற்கு நீதித்துறை மந்திரி ஜூடிட் லர்கா அனுமதி அளித்தார். இது பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது. அதிபர் கடாலின் நோவக்குக்கு எதிர்ப்பு வலுத்தது. அவர் பதவி விலகக்கோரி போராட்டங்கள் நடந்தன.

இந்த நிலையில் கடாலின் நோவக் அதிபர் பதவியில் இருந்து விலகுவதாக அறிவித்து ராஜினாமா செய்தார். இது தொடர்பாக அவர் தொலைக்காட்சியில் கூறும்போது நான் ஒரு தவறு செய்துவிட்டேன். குழந்தைகள் இல்ல நிர்வாகி, துஷ்பிரயோகம் செய்யவில்லை என்று நம்பி மன்னிப்பு வழங்க முடிவு செய்தேன்.

ஆனால் அதில் நான் தவறு செய்துவிட்டேன். இன்று நான் உங்களை அதிபராக சந்திப்பது கடைசி நாள் என்றார். அதேபோல் நீதித்துறை மந்திரி வர்காவும் பதவி விலகினார்.

# மியான்மரில் சங்கிலித்தொடர் விபத்தில் 3 பேர் பலி

**யாங்கூன் : பிப். 12,**

**மியான்மரில் சங்கிலித்தொடர் விபத்தில் ஒரு பெண் உள்பட 3 பேர் உயிரிழந்தனர்.**

மியான்மர் தலைநகர் யாங்கூனில் இருந்து மண்டலேவுக்கு கார் ஒன்று சென்று கொண்டிருந்தது. மண்டலே நெடுஞ்சாலையில் சென்றபோது அந்த கார் திடீரென டிரைவரின் கட்டுப்பாட்டை இழந்தது. இதனால் நிலைதடுமாறி எதிரே சென்ற மற்றொரு கார் மீது மோதியது. பின்னர் அடுத்தடுத்து 5 கார்கள் இந்த விபத்தில் சிக்கின.

இதுகுறித்து தகவலறிந்த மீட்பு படையினர் சம்பவ இடத்துக்கு விரைந்து சென்று அந்த கார்களை அப்புறப்படுத்தினர்.



இதனையடுத்து அந்த காரில் சிக்கியவர்களை மீட்டு சிகிச்சைக்காக ஆஸ்பத்திரியில் அனுமதித்தனர். எனினும் இந்த சங்கிலித்தொடர் விபத்தில் ஒரு பெண் உள்பட 3 பேர் உயிரிழந்தனர்.

மேலும் படுகாயம் அடைந்த 7 பேருக்கு ஆஸ்பத்திரியில் தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. இதன் காரணமாக அந்த நெடுஞ்சாலையில் பல மணி நேரம் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

## டெல்லியை முற்றுகையிடப்போவதாக விவசாயிகள் அறிவிப்பு; பாதுகாப்பை பலப்படுத்த போலீஸார் தீவிரம்





## ஆட்சிக்கு வந்தால் பணமோசடி தடுப்புச் சட்டத்தை மாற்றுவோம் : ப.சிதம்பரம்

## பாஜக கூட்டணியில் அதிமுக இல்லை என்பது இறுதியானது; உறுதியானது




சென்னை / புதுக்கோட்டை | 12.02.2024 | varalaruu.com | பக்கம்:6 | ரூ.10

புதுகை வரலாறு நாளிதழ்

# வரலாற்றில் இன்று



## இன்றைய பிறந்த நாள்

ஜென்னி வான் வெசுட்பலென் , கார்ல் மார்க்சின் மனைவி (பி.1814) (இ.1881)



உசேன் ஓன் , மலேசியாவின் 3வது பிரதமர் (பி.1922) (இ.1990)



ஹுவான் கார்லோஸ் ஃபெரேரோ , எசுப்பானிய டென்னிசு வீரர் (பி.1980)



## இன்றைய நினைவு நாள்

ஜி. யு. போப் , தமிழ்நாட்டில் தமிழ்ப் பணி புரிந்த அமெரிக்கர் (பி.1820) (இ.1908)



புண்ணியமூர்த்தி சத்தியமூர்த்தி , தமிழீழ ஊடகவியலாளர் (இ.2009)



முருகதாசன் , தீக்குளித்து இறந்த ஈழத்தமிழன் (பி.1982) (இ.2009)



சங்கரலிங்கம் ஜெகந்நாதன் , காந்தியவாதி, இந்திய விடுதலைப்போராட்ட வீரர் (பி.1914) (இ.2013)

